Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 14-8-2013 Issued : 14-8-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 8, 2013—தொகுதி 38—எண் 2**

**Friday, the 8th February 2013—Volume 38—No. 2**

*சட்ட பேரவைச் செயலகம், சென்னை-600 002*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 002**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, தை 26, திருவள்ளுவர் ஆண்டு – 2044

## 2013 பிப்ரவரி 8, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறைஎன்று வைக்கப் படும்."

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**31**—

**துணை மின் நிலையம்**

***17430—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை பகுதியில் 110/33 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை பகுதியில் ஒரு 110/33 கி.வோ. திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலும், 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலும், வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் தலைமையில் மின் மிகை மாநிலமாக இருந்திட்ட அன்னைத் தமிழகத்தை மீண்டும் மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டிட ஊண், உறக்கம் பாராது, ஊர் உறங்கும் வேளையிலும் அயராது உழைத்து வருகின்ற, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனது கோரிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவ்வளவுதானா, இரண்டாவது கேள்வி கேட்கப் போகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.*

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்குவதிலும், மீண்டும் மின் மிகை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதிலும் அயராது பாடுபடுகின்ற, வணக்கத்திற்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வில்லிவாக்கம் தொகுதி மக்களுக்காக ஒரு துணைக் கேள்வியை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன். அயனாவரம் பகுதி, மக்கள் நெருக்கடி நிறைந்திருக்கிற அடர்த்தியான ஒரு பகுதி. அந்தப் பகுதியில்* low voltage, power interruption, overloading *போன்ற பிரச்சினைகள் படிப்படியாகத் தீர்ந்து வருகின்றன. இந்தப் பிரச்சினைகளை முற்றிலுமாகத் தீர்ப்பதற்கு அங்கே 33* KVA sub-station *ஒன்றை விரைவிலே அமைத்துக் கொடுத்தால், முழுமையான தீர்வு ஏற்படும்.*

*அதேபோன்று, ஐசி.எப். பகுதியில்* out-door sub-station *50 ஆண்டுக் காலமாக இருக்கிறது. அந்த* out-door sub-station-*லே* Trans former *திறனை மாற்றிட வேண்டும். அந்தப் பகுதியில் இரண்டு 8 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றிகள் இருக்கின்றன; அதனை 16 எம்.வி.ஏ. ஆக மாற்றித் தந்திட வேண்டும். சிட்கோ நகர்ப் பகுதியில்* indoor sub-station *இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு* indoor sub-station- *மின்மாற்றியை 16 எம்.வி.ஏ. ஆக மாற்றினால் வில்லிவாக்கம் தொகுதி முழுமைக்கும் நிரந்தரமாக மின்சாரப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும். அதற்கு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அயனாவரம் பகுதியிலும், வில்லிவாக்கம் பகுதியிலும் பெருகி வருகின்ற மின் தேவையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அயனாவரம் பகுதியிலே, இரயில்வே மருத்துவமனையும், அயனாவரம் பகுதி மக்களும் பயன்படுத்துகின்ற வகையிலே, ஒரு 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆனால், அதற்குரிய நிலம் கிடைக்காமல் இருக்கிறது. அது மாநகராட்சிப் பகுதியிலே உள்ளதால், நிலம் கையகப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, அதற்கான நிலத்தைத் தற்போது தேடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்காக ஏதேனும் இடம் கிடைத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அதற்கான வழிவகையைச் செய்தால், அதைத் தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2013 பிப்ரவரி 8

*முற்பகல் 10-05*

இதற்கிடையில் இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குக் கேட்டிருக்கிறது. இரயில்வே துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியுள்ள இடத்தைக் கொடுக்க இசைவு தெரிவித்தால், அந்த இடத்தில் உடனடியாக புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை, இரயில்வே துறை அதற்கான இடத்தைக் கொடுக்காதபட்சத்தில், மாற்று இடம் கிடைப்பதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் துணைபுரிந்தால், அந்த இடத்தில் உடனே புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டுள்ளார்கள். ஐ.சி.எப். பகுதியிலுள்ள 33/11 கி.வோ. திறன் கொண்ட அந்தத் துணை மின் நிலையம், 3x8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் கூடிய துணை நிலையமாக உள்ளது. அங்கே பெருகி வரும் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, அங்குள்ள மூன்று மின்மாற்றிகளில், ஒரு மின்மாற்றியை 8 எம்.வி.ஏ. என்பதற்குப் பதிலாக, 16 எம்.வி.ஏ. திறன் கொண்டதாக மாற்ற வேண்டுமென்று கோரியிருக்கிறார். அந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொண்டு, உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருவதால், இந்த மாத இறுதிக்குள்ளாகவே ஐ.சி.எப். பகுதியிலுள்ள 33/11 கி.வோ. துணை மின்நிலையத்திலுள்ள ஒரு மின்மாற்றியை 8 எம்.வி.ஏ. என்பதற்குப் பதிலாக 16 எம்.வி.ஏ. திறன் கொண்டதாக மாற்றுவதற்கும் இந்த மாதத்திற்குள்ளாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, சிட்கோ நகர்ப் பகுதியிலுள்ள 33/11 கே.வி. துணை மின்நிலையத்தில், 3x8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மூன்று மின்மாற்றிகள் இருக்கின்றன. அதிலும், பெருகிவரும் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின்மாற்றியை 16 எம்.வி.ஏ. திறன் கொண்டதாக மாற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாகத் தேவையான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும். அந்தப் பகுதியிலும்



2013 பிப்ரவரி 8]

இந்த மாத இறுதிக்குள்ளாகவே தரம் உயர்த்தப்படும்; 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட ஊரப்பாக்கம் ஒரு பெரிய ஊராட்சி ஆகும். அந்த ஊராட்சியில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. அந்தப் பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குப் போதுமான இடமும் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பகுதிக்கு புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 2012-2013 ஆம் ஆண்டில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு 60 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை 514 கோடி ரூபாய் என்ற அளவில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் முடிந்தவடைந்த பிறகு, அடுத்து எந்தெந்தெந்த இடங்களில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அந்தந்த இடங்களில் ஏற்படும் மின் பளுவிற்கு ஏற்ப, மின் தேவைக்கேற்ப, அதை ஈடுசெய்கின்ற வகையிலே, புதிய திட்டத்திலே எந்தெந்த இடங்களில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதைக் கண்டறிந்து, அந்த இடங்களில் வரும் ஆண்டுத் திட்டத்தில் அதை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 பிப்ரவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட வலியஏலா பகுதியில் மின் இணைப்பு இல்லாமல் கிட்டத்தட்ட 142 வீடுகள் உள்ளன. அங்கு சாலை வசதிகள் செய்து தர சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். அதேபோல, அப்பகுதிக்கு மின் இணைப்பும் வழங்கி அவர்களுக்கு உதவுவீர்களேயானால், அது தகுந்த நேரத்தில் செய்த உதவியாக இருக்கும். அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

அதேபோல, பேச்சிப்பாறை ஊராட்சி, அன்பு நகர் பகுதியிலுள்ள மக்களுக்கு மின் விசிறி, கிரைண்டர், மிக்ஸி போன்ற பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன; இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் அப்பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. எனவே, அப்பகுதி மக்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதுகுறித்து, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது குறிப்பிட்டேன். அப்போது செய்து தரப்படும் என்று கூறினீர்கள். அன்பு நகர் பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாகக் கூறினீர்கள். அதற்காக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, வலியஏலா பகுதியிலும் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்பு நகர் பகுதி வருவாய்த் துறையின்கீழ் வருகிறது. எனவே, அதில் மின் இணைப்பு கொடுப்பதற்கு பிரச்சினைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், வலியஏலா பகுதி மலைப் பகுதி, அதனால், அது வனப் பகுதி என்று கூறுகின்றார்கள். இருந்தாலும்கூட, மக்கள் 80 ஆண்டுகளாக அந்த இடத்தில் வசித்து வருகிறார்கள். எப்படியாவது அந்த மின் இணைப்புக்கு வழிவகை செய்ய வேண்டும். மத்திய அரசிடம் நீங்கள் deforestation—க்குக்கூட கோரிக்கை அனுப்பி வைத்தால், நானும் அதை follow up செய்து வாங்குவதற்குண்டான முயற்சிகளில் ஈடுபடுவேன் என்பதைத் தெரிவித்து, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 8]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளிலே மின் இணைப்பு கிடைப்பதற்குத் தடையாக இருப்பதற்குக் காரணம் மலைப் பகுதி கிராமங்கள் என்பதால் அங்கே மின் இணைப்பு கொடுக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். பொதுவாக, மலைப் பகுதி கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு அரசு, அம்மாவினுடைய அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. ஆனால், மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறுவதுதான் சற்று கடினமாக இருக்கிறது. ஆகவே, நீங்களும் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையிடம், தமிழ்நாடு மின்சார வாரியம் எந்தெந்த அனுமதியெல்லாம் கேட்டிருக்கிறதோ அதற்கு அனுமதி பெற்றுத் தருவதற்கு உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசினுடைய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், அந்த வனக் கிராமங்களுக்கு மின் இணைப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கிடையிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய சீரிய சிந்தனையிலே உதித்த அற்புதமான திட்டமான சூரிய ஒளி மின் திட்டத்தைப் பயன்படுத்துகின்ற வகையிலே, சூரிய ஒளி தெரு விளக்குகளை அங்கே அமைப்பதற்கு அல்லது அந்த வீடுகளிலே அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பகுதிகளிலே எந்தெந்த இடங்களிலெல்லாம் மின் இணைப்பு கிடைக்கவில்லை என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொல்வீர்களேயானால், அதை நீங்கள் எழுத்துபூர்வமாகக் கொடுத்தால் அதற்குரிய நடவடிக்கைகளை அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் பேசுகிறபோது, வனத் துறையின் அனுமதி குறித்துப் பேசினார்கள். மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மாண்புமிகு ஜெயந்தி நடராஜன் அவர்கள் கடந்த வாரம், 'தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்குத் தடையாக எந்த உத்தரவையும் நாங்கள் சுற்றுச்சூழல் காரணமாகப் பிறப்பிக்க மாட்டோம்' என்று பேசி, அது பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை அரசுக்கு, ஏதாவது அவர்கள் சொல்லியிருக்கிறார்களா? மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர், மாண்புமிகு ஜெயந்தி நடராஜன் அவர்களை சந்தித்து, அவர்கள் அறிக்கையிலே சொன்னதை செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய பெரிய திட்டங்களுக்கே இன்னும் தடை இருக்கிறது. சாதாரணமாக, வீடுகளுக்கு, கிராமங்களில் மின் இணைப்பு வழங்குவது மட்டுமல்ல, குந்தா நீரேற்று மின் திட்டம் என்று 500 மெகா வாட்டிற்கான திட்டத்திற்கு இன்றைக்கும் மத்திய அரசுதான் அனுமதி வழங்கவில்லை. தமிழ்நாட்டினுடைய மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான இப்படிப்பட்ட முக்கியமான திட்டங்களிலேகூட இன்னும் அனுமதியைப் பெற முடியாத சூழ்நிலை இன்றைக்கும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவேதான் நமது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சவுந்தரராசன் அவர்கள் சொன்ன ஆலோசனையை திருமதி விஜயதரணி அவர்கள் ஏற்று, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் பேட்ஜ் அணிந்து அவைக்குள் வந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட எலவனாசூர்கோட்டையைச் சுற்றிலும் சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அங்கேயிருக்கிற துணை மின் நிலையத்திற்கு—தியாகதுர்க்கத்திலிருந்து, 20 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து மின்சாரம் வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியைச் சுற்றி கிட்டத்தட்ட 1,500 மின் மோட்டார்கள் இயங்கி வருகின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு இடங்களிலும் துணை மின் நிலையங்கள் சம்பந்தமாக உறுப்பினர்கள் கேட்பதற்கு பொதுவாகவே பதில் சொல்லிவிடுகிறேன். இப்போது 12-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தேர்வு செய்யப்பட்டு, 2012-2013 ஆம் ஆண்டிற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன; 60 துணை மின் நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன. புதியதாக ஏற்படுத்த வேண்டுமென்றால் அந்தப் பகுதியினுடைய மின் பளுவை ஆய்வு செய்து, தேவை ஏற்படின், தேவை ஏற்பட்ட இடங்கள் அத்தனையையும் கண்டறிந்து அடுத்த திட்டத்திலே அது சேர்த்துக்கொள்ளப்படும். அதற்குப் பின்பு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

**திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். எனது தொகுதியில் இரண்டு உப்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும், அதிக அளவில் விவசாயமும் செய்ய ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீரை எடுத்திட, சீரான மின்சாரத்திற்கு தற்சமயம் அமைந்துள்ள 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் உள்ள 5 எம்.வி.ஏ. பவர் மின்மாற்றியை 8 எம்.வி.ஏ. பவர் மின்மாற்றியாகத் தரம் உயர்த்தி தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், 110/33 கே.வி. துணை மின் நிலையம் அமைத்திடவும் ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

[2013 பிப்ரவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 33/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் இருந்தால் அந்த இடங்களிலே தேவை ஏற்பட்டால் நிச்சயமாக மின் பளுவிற்கேற்ப 5 எம்.வி.ஏ. திறன் கொண்டதை 8 எம்.வி.ஏ. திறன் கொண்டதாக மாற்றி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன துணை மின் நிலையத்திலே இருக்கின்ற 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட அந்த மின்மாற்றியை 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். புதிய மின் நிலையம் அமைப்பது குறித்து நான் ஏற்கெனவே சொன்ன பதில் பொருந்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தவுடன் 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னுடைய திருமங்கலம் தொகுதி டி. கல்லுப்பட்டி ஒன்றியம், சிலமலைப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதற்கான இடமெல்லாம் அங்கே வழங்கப்பட்டுவிட்டது. எனவே, அந்தப் பகுதி மின் பற்றாக்குறையை மனதில் கொண்டு, இந்த ஆண்டே அந்த சிலமலைப்பட்டியில் உள்ள துணை மின் நிலையத்தைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 பிப்ரவரி 8]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கெல்லாம் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமென்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோமோ அந்த இடங்களில் எல்லாம் உடனடியாக படிப்படியாக அதைச் செயல்படுத்துவது பற்றிய நடவடிக்கைகளை விரைவாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். உங்களுடைய டி. கல்லுப்பட்டி பகுதியிலே இருக்கின்ற அந்தப் பணியை விரைந்து முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதிக்குட்பட்ட, சத்தியவாடி கிராமத்திலே சுமார் 20 ஊராட்சிகளுக்கு, அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு, அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர்கள் தனித் தனியாக கேட்கின்ற அத்தனைக் கேள்விகளுக்கும் தொகுத்து பதிலைப் பொதுவாகவே சொல்லிவிடுகிறேன். எந்தெந்த இடங்களிலே என்பது ஏற்கெனவே சொன்னதுதான். இப்போது 2012-2013 ஆம் ஆண்டிலே நடைபெற்று வருகின்ற 60 துணை மின் நிலையங்கள் அமைக்கும் அந்தப் பணிகள் முடிவடைந்தவுடன், புதியதாகத் தேர்வு செய்யப்படுகின்றபோது உங்களுடைய பகுதியையும் கருத்திற்கொண்டு அங்கே இருக்கின்ற மின் பளுவின் தேவைக்கேற்ப புதிய மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற சூழ்நிலை உருவாகுமானால், கண்டிப்பாக அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட, கன்னங்குடி ஒன்றியத்தில் மிகவும் குறைந்தழுத்த மின்சாரமே கிடைக்கின்றது. இங்கு துணை மின் நிலையம் வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டிருக்கின்றோம். அதற்கான இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. தேவகோட்டையிலிருந்து 40 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய கன்னங்குடி பகுதிக்கு செல்லக்கூடிய மின்சாரத்தை அளவிட்டு கணக்கு எடுக்கும்போது அங்கு குறைந்தழுத்த மின்சாரமே கிடைக்கின்றது. ஆகவே, இந்த நடப்பு நிதியாண்டிலே எனது தொகுதிக்குட்பட்ட கன்னங்குடி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி சட்டமன்றத் தொகுதி, கன்னங்குடி ஒன்றியப் பகுதியிலே ஏற்படுகின்ற மின் பளுவை ஆய்வு செய்து அங்கே அதற்கேற்ப தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஏற்படின், வருகின்ற புதிய திட்டங்களிலே அது இணைத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***6315—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) விராலிமலை தொகுதியிலுள்ள கிராமப் பகுதிகளுக்குக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விராலிமலை சட்டமன்றத் தொகுதியில், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 566 குடியிருப்புகளும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 346 குடியிருப்புகளும் மற்றும் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 49 குடியிருப்புகளும், மொத்தம் 961 குடியிருப்புகள் அடங்கும். இவற்றில் விராலிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த 23 குடியிருப்புகள் மற்றும் அன்னவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த 5 குடியிருப்புகள், ஆக மொத்தம் 28 குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே உள்ள புதுக்கோட்டை நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மணிகன்டம் 151 குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

விராலிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த மீதமுள்ள 543 குடியிருப்புகள், அன்னவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த மீதமுள்ள 421 குடியிருப்புகள் மற்றும் குன்றாண்டார் கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த 276 குடியிருப்புகளை உள்ளடக்கிய காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. காவிரியாற்றினை நீராதாரமாகக் கொண்டுள்ள 1,891 குடியிருப்புகளுக்கான முதலாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.301.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டுள்ள 1,751 குடியிருப்புக்கான இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு

ரூ.315.70 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்களில் திரளும் நீர் கன்னத்தில் உருளும்முன் கை கொண்டு துடைத்திடும் கருணைத் தாயே, விராலிமலைத் தொகுதி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்குக் காவிரி நீர் கொடுத்த காவிரித் தாயே, கேள்வி கேட்டு, இந்தக் கேள்வி அவைக்கு வரும் முன்னரே திட்டத்தை அறிவித்து, நிதி ஒதுக்கி இன்றைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்ற நிலையை அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு விராலிமலை தொகுதி மக்கள் சார்பிலும், புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி திட்டம் எப்போது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மட்டும் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அறிவித்தது. அதனடிப்படையில் 2012-2013-ல் புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 3,642 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வல்லம் பேரூராட்சிக்கான காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிக்கையும் தரப்பட்டிருக்கிறது. இதை விரிவான திட்டமாகத் தயாரித்து அந்தத் திட்டத்தின்படியாக இந்த இரு திட்டங்களுக்கும், ஒரு திட்டத்திற்கு ரூ.301.50 கோடிக்கும், அடுத்தத் திட்டத்திற்கு ரூ.315.70 கோடிக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. ஒப்பந்தப்





புள்ளிகளின் கடைசி தேதி 21-3-2013. இந்த ஒப்பந்தப் புள்ளிகள் முடிவடைந்து, பணி ஆரம்பித்து 30 மாத காலத்தில் பணி நிறைவடைந்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கரங்களால் தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி கிராமத்தில் 18,90,000 ரூபாய்க்கான திட்டத்தில், ஒரு தரைத் தள நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அது இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் குடிநீர் வழங்குவதில் மிகவும் சிரமம் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்து முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் நிலை குறித்து ஆய்வு செய்து, விரைவுபடுத்தி மாண்புமிகு உறுப்பினர் கோரிய கருத்திற்கேற்ப நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆற்காடு வரையிலே வருவதாக அறிகிறேன். ஏற்கெனவே ஆரணிக்கு, ஆற்காடு ஆற்றிலிருந்து ஆழ்துளைக் கிணறு மூலமாக existing pipeline வழியாக குடிநீர் கொண்டுசெல்லப்படுகிறது. ஆற்காடு வரையில் விரிவுபடுத்தப் பட்டிருக்கக்கூடிய அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்

[2013 பிப்ரவரி 8

திட்டத்தை, ஏற்கெனவே இருக்கக்கூடிய பைப்லைனிலே இணைப்பு தந்து—ஆரணியிலும் தற்போது குடிநீர்த் தட்டுப்பாடு ஆரம்பமாகியிருக்கிறது—எனவே அதைப் போக்கிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் திட்டம் அறிவிக்கப்பட்டு, பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி இப்போது 20 விழுக்காடு அளவுக்கு நிறைவுபெற்று இருக்கிறது. (குறுக்கீடு) ஒகேனக்கல் திட்டம் அல்ல, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இப்பொழுது பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் வாயிலாக எத்தனை குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ, அத்தனை குடியிருப்புகளுக்கும் நிறைவான தண்ணீர் வழங்கப்படும். புதியதாக குடியிருப்புகளைச் சேர்க்க வேண்டும் என்று சொன்னால், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளுக்குத் தண்ணீர் குறைவாக வந்துவிடும். அப்படிப் புதிதாக சேர்க்கப்பட வேண்டிய குடியிருப்புகளுக்குத் தண்ணீர் தேவை என்று சொன்னால், அதற்குத் தனி திட்டம் தீட்டப்பட்டு, அது நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி மேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 40, 50 சதவீதம் பணிகள் முடிவடைந்துவிட்டன. அந்தப் பணிகள் முடிவடைந்து, மக்களுக்குக் குடிநீர் எப்போது வழங்கப்படும் என்பதை



2013 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தற்போது 40, 50 விழுக்காடு பணிகள் முடிவடைந்திருக்கின்றன என்று சொன்னார்கள். மீதமுள்ள 50 விழுக்காடு பணிகள் முடிவடைந்தவுடனே தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியிலே 60 கோட்டத்திற்கும் தினமும் 71 எம்.எல்.டி. குடிதண்ணீர் வருகின்றது. தற்போது மேட்டூரிலே குறைவாகத் தண்ணீர் இருந்தாலும்கூட, 71 எம்.எல்.டி. தண்ணீர் தினமும் வருகிறது. தற்போதைய மக்கள் தொகை நிலவரப்படி, சேலம் மாநகராட்சியினுடைய மக்கள்தொகை 8 இலட்சத்து 38 ஆயிரம். ஒரு நபருக்கு 100 லிட்டர் தண்ணீர் என்று வைத்தால்கூட 8 கோடியே 38 இலட்சம் லிட்டர் தண்ணீர் போதுமானது. 7 கோடியே 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் வந்தாலும்கூட அனைத்துப் பகுதிகளிலும் 14 நாட்கள், 15 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பத்திரிகைகளிலே பார்த்திருக்கலாம், எங்கு பார்த்தாலும் குடிதண்ணீர் வரவில்லை என்று பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். ரூ.289 கோடியிலே மேட்டூரிலிருந்து தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் தண்ணீர் வருவதற்கு ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு மேலாகும். ஆகையினாலே அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிதண்ணீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

அதுமட்டுமல்லாமல் சேலம் மாவட்டப் பொது மருத்துவமனையிலே, Super Speciality மருத்துவமனைக்கும்,

[2013 பிப்ரவரி 8

குறிப்பாக பிரசவ வார்டுக்கும் மாநகரக் குடிதண்ணீர் கிடைப்பதேயில்லை. அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கின்ற தண்ணீர் போக, தண்ணீர் தேவை என்பதற்காகத்தான் புதியதாக ஒரு திட்டத்தைத் தீட்டி புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு மேட்டூர் பகுதியிலேயிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது. அந்தத் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்ற பட்சத்தில், மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய 135 லிட்டர் தண்ணீர் ஒரு நபருக்குக் கொடுக்கக்கூடிய தண்ணீரை நிறைவாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கொடுக்கும்.

அதோடுமட்டுமல்லாமல், மருத்துவமனைக்குக் குடிதண்ணீர் கேட்டிருக்கிறார். மருத்துவமனை துறை அலுவலர்கள் கேட்கின்றபோது, மருத்துவமனைக்குத் தேவையான தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், கமுதி, கடலாடி போன்ற பகுதிகளுக்குக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டிருக்கின்ற நீரின் அளவு வறட்சியைக் காரணம்காட்டி குறைத்துக்கொண்டே வரப்படுகிறது. அப்பகுதி மக்களுக்குக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தவிர வேறு நீரே கிடைக்காத நிலை இருப்பதால் அப்பகுதி மக்களுக்குத் தொடர்ந்து கூடுதலான குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.



2013 பிப்ரவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திற்கு காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக இப்பொழுது தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதை ஆய்வு செய்து, அதற்கு என்ன காரணம் என்பதையும் ஆய்வு செய்து உடனடியாக அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது பொன்னேரி தொகுதியில், மீஞ்சூர் ஒன்றியத்திற்குட்பட்ட பழவேற்காடு, அண்ணாமலைச்சேரி, அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்கள் கடலோரப் பகுதிகளாக இருப்பதால் அப்பகுதியில் தற்போது மெதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்தத் தண்ணீர் மக்களுக்குக் குடிப்பதற்கு ஏதுவாக இல்லை. அதனால் பொன்னேரி ஆரணியாற்றுப் பகுதியிலேயிருந்து அந்தப் பகுதிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குடிதண்ணீரின் நிலையை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, குடிப்பதற்குத் தகுதியில்லாதபட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து,

அந்தப் பகுதிகளுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட பாலமலை ஊராட்சி, கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,500 அடி உயரத்தில் உள்ளது. அந்த ஊராட்சியில் 33 குக்கிராமங்களில் சுமார் 5,000 பேர் வசித்து வருகின்றனர். குடிதண்ணீருக்காக அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். அப்பகுதி மக்களுக்கு மேட்டூரிலிருந்து குடிநீர் கிடைக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மேட்டூரின் பின்பகுதி, கொளத்தூரிலிருந்து 4,500 அடி உயரத்தில் உள்ள மலைப் பகுதிக்குத் தண்ணீர் வேண்டுமென்று கூறியிருக்கிறார். அந்தப் பகுதியை துறை அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்த பின், எந்த அடிப்படையில் அப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்குமோ அதற்கு ஏற்றவாறு திட்டங்களைத் தீட்டி அந்தக் கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.

**திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில், எனது தொகுதியான உதகைக்குட்பட்ட குந்தா ஊராட்சி, முல்லிகூர் ஊராட்சி, பிக்கெட்டி பேரூராட்சி, கீழ்க்குந்தா பேரூராட்சி போன்ற





பகுதிகளுக்குக் குடிநீர் ஆதாரம் இருக்கின்ற மேல் பவானி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பகுதிகள் மலை சூழ்ந்த பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், எந்தப் பகுதியிலிருந்து நீர் எடுத்து அப்பகுதிகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை ஆய்வு செய்து, அப்படி எடுக்கப்படுகின்ற நீரும் வற்றிவிடாமல் வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய சூழ்நிலைகளை ஆய்வு செய்து, ஆய்வுக்குப் பின்பாக முறைப்படி நடவடிக்கை எடுத்து, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில், இளையான்குடி பகுதியில் கிட்டத்தட்ட 55 ஊராட்சிகளில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மிக அதிகமாக உள்ளது. காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சில கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குகிறார்கள், சில கிராமங்களுக்குக் குடிநீர் இணைப்புகள் இல்லை. ஆகவே, இளையான்குடியில் விடுபட்டுப்போன கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மேலும், இரண்டு திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம் ஒன்றியங்கள் அவற்றில் சேர்க்கப்படுமா? 14 ஒன்றியங்களில் எந்தெந்த ஒன்றியங்களுக்கு இத்திட்டம் பயன்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, நிர்ணயிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு வழங்கப்படுகிற குடிதண்ணீரை எடுத்து புதிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க முடியாது. திட்டத்தில் இணைக்கப்படாத குடியிருப்புகளுக்கு அந்தப் பகுதியின் நிலத்தடி நீரைப் பயன்படுத்தியோ, வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்தோதான் தண்ணீர் வழங்க வேண்டியிருக்கும். ஆய்வு செய்து, வாய்ப்பில்லாத குடியிருப்புப் பகுதிகளுக்கு வேறு திட்டத்தின் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**33—**

## அங்கன்வாடி மையம்

***10122—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, சுங்குடி வருதம்பட்டி கிராமத்திலுள்ள குறு அங்கன்வாடி மையத்தை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி சுங்குடி வருதம்பட்டி கிராமத்தில் பிப்ரவரி 2010 முதல் குறு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 400 முதல் 800 வரை மக்கள்தொகை உள்ள இடங்களில் முதன்மை அங்கன்வாடி மையங்களைச் செயல்படுத்த வேண்டும். அதனடிப்படையில் தற்போது 692 மக்கள்தொகைதான் அந்தக் கிராமத்தில் இருக்கின்ற காரணத்தினால், இப்போது குறு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சங்கரி தொகுதி சுங்குடி வருதம்பட்டி குறு அங்கன்வாடி மையத்தை, முதன்மை மையமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, சுங்குடி வருதம்பட்டி கிராமத்தில் உள்ள குறு அங்கன்வாடி மையத்தினை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். அதற்காக தாயுள்ளம் கொண்ட தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாக இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே தமிழகத்தில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன, மேலும் புதியதாக எத்தனை அங்கன்வாடி மையங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலமாக மொத்தம் 49,499 குழந்தைகள் மையங்களும், 4,940 குறு மையங்களும், ஆக மொத்தம் 54,439 மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. புதியதாக*

[2013 பிப்ரவரி 8

1,103 அங்கன்வாடி மையங்கள் தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் முல்லைவனம் கிராமத்தில் ஏறக்குறைய 50 குழந்தைகள் உள்ளனர். ஆனால் மக்கள்தொகை அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல 70 குடும்பங்களே உள்ள ஒரு கிராமம். குழந்தைகள் அங்கன்வாடிக்குச் செல்ல வேண்டுமென்றால், 2 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, குழந்தைகளுடைய எண்ணிக்கையையும் தூரத்தையும் கணக்கில் எடுத்து முல்லைவனம், கருத்தம்பட்டி போன்ற பல கிராமங்களில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், அந்தக் கிராமத்திலேயே அங்கன்வாடி மையம் வேண்டுமென்று சொன்னால், குறு அங்கன்வாடி மையமாகத்தான் செயல்படுத்த முடியும். பெரிய அங்கன்வாடி மையமாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், 2 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய பெரிய கிராமத்தைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். ஆகவே, குழந்தைகள் வந்து செல்வதற்கு வசதி இல்லாத சூழ்நிலையிலே இருக்கக்கூடிய அது மாதிரியான கிராமப் பகுதிகளைக் குறித்துக் கொடுப்பார்களேயானால், மாவட்ட ஆட்சியரின் அதிகார வரம்புக்குள்ளேயே



2013 பிப்ரவரி 8]

இருக்கும்பட்சத்தில் அங்கன்வாடி மையங்களை அமைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட 104-வது வட்டத்தில், நேரு பார்க் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் கட்டி முடிக்கப்பட்டு, பூட்டியிருக்கும் அங்கன்வாடி மையத்தினைத் திறந்து செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மையம் எப்போது கட்டப்பட்டது என்பது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. இருந்தாலும், மிக விரைவில் அது திறக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட தோபாடி கிராமத்திலே அங்கன்வாடிக் கட்டடம் கட்டப்பட்டு 6 மாதங்களாகின்றன. அதைத் திறப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்படாமல் இருக்குமேயானால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தி, திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

### வட்டச் சாலை

*__4796—திரு. கே.பி.பி. பாஸ்கர்:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில் வட்டச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் நகரத்திற்கு வட்டச் சாலை அமைக்க நில எடுப்புப் பிரேரணை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு செய்யத் துடிக்கும் உள்ளம், துணிவு ஒன்றே துணையாய்க் கொள்ளும்; ஓய்வறியா உழைப்பில் ஓங்கு தமிழ்நாட்டை முதன்மையாக்கும் அம்மா, என்றும் மக்கள் உம் பக்கம்; மாநிலமே தலைவணங்கும் என்று சொல்லி அம்மாவை வணங்குகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகரில் கடுமையான போக்குவரத்து நெரிசல் உள்ளதாலும், சேலம், ஈரோடு, திருச்சி போன்ற ஊர்களுக்கான பேருந்துகள் மற்றும் வாகனங்கள் வந்து செல்வதாலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து அந்தத் திட்டத்தை அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டு, நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவரகளே, முதற்கட்டமாக நில எடுப்புப் பிரேரணை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கிலோ மீட்டர் 249/400-ல் தொடங்கி, கிலோ மீட்டர் 259/823-ல் முடிவடையும் வகையில் 22.660 நீளமுள்ள வட்டச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 11 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 68 ஹெக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. நில எடுப்புப் பணிக்கு ரூ.10.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிந்த பின் வட்டச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட செயின்ட் தாமஸ் சாலையும், ஆற்காடு சாலையும் சந்திக்கக்கூடிய போரூர் ஜங்ஷனில் மேம்பாலப் பணிகள் துவக்கப்படாமல் இருக்கின்றன. அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ளது. காலையும், மாலையும் peak hours-ல் கிட்டத்தட்ட அந்த பாயின்ட்டைக் கடப்பதற்கு

குறைந்தபட்சம் அரை மணி நேரம் முதல் அதிகபட்சம் 40 நிமிடங்கள் ஆகும். எனவே, அந்தப் பணியை உடனடியாக துவங்கி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய முயற்சிகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில் நிலம் எடுப்பதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. இப்பொழுது நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. அந்தப் பாலம் அமைக்கப்படுகிற சாலையில், அடிப்பகுதியில் மாநகராட்சியின் குடிநீர்க் குழாய்கள் சென்றுகொண்டிருக்கின்றன. அதை மாற்றியமைக்க வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ள காரணத்தினாலே, அதை மாற்றியமைக்க டெண்டர் அறிவிக்கப்பட்டிருக்கிறது. டெண்டர் விட்டு அந்தப் பணி முடிவடைந்தவுடன் பாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதியான வேடசந்தூரில் திண்டுக்கல்-கரூர் செல்லக்கூடிய சாலையில் எரியோடு பேரூராட்சி உள்ளது. அந்தப் பேரூராட்சியில் சாலை மிகவும் குறுகலாக இருக்கின்ற காரணத்தினால் சிமென்ட் தொழிற்சாலைக்கு வரக்கூடிய லாரிகளால் நெரிசல் ஏற்பட்டு, கிட்டத்தட்ட போக்குவரத்து ஸ்தம்பித்து விடுகிறது. ஆகவே, எரியோடு பேரூராட்சியில் ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அந்தப் பேரூராட்சியில் போக்குவரத்து நெரிசலை ஆய்வு செய்து, போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும்பட்சத்தில் அங்கு புறவழிச் சாலை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், சுற்றுலாப் பயணிகள் ஒரு பக்கம், கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் இன்னொரு பக்கம், மீன் வியாபாரிகள் ஒரு பக்கம் என்று முற்றிலும் நெரிசல் மிகுந்து காணப்படுகின்றது. இந்த நெரிசலைத் தவிர்ப்பதற்காக செம்மேட்டிலிருந்து தெற்கு நோக்கி வேர்க்கோடுவரை ஒரு வட்டச் சாலையும், அதேபோல இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் நேரடியாகக் கோயிலுக்குச் செல்லக்கூடிய வகையில் செம்மடம் பகுதியிலிருந்து ஆத்திக்காடு, ஏற்காடு வழியாக இன்னொரு வட்டச் சாலையும் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாக இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

[2013 பிப்ரவரி 8

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு வழியாகவும், விழியாகவும் இருந்து மாசற்ற மக்களாட்சி நடத்துகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் புனிதமலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, நாகை, தஞ்சை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத் தொடர்பு எல்லைப் பகுதிகளாக உள்ளன. இப்பகுதி மக்களுடைய நலன் கருதி, காட்டுமன்னார்கோவில் பகுதியில் வட்டச் சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டுமன்னார்கோவிலில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாகவும், அங்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்றும் இங்கே கேட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும்பட்சத்தில் நிதிநிலைமைக்கேற்ப புறவழிச் சாலை அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை பகுதியிலே இருக்கக்கூடிய திண்டுக்கல் முதல் கோவை வரை செல்லக்கூடிய 209 எண் சாலையானது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய 3 நகரப் பகுதிகளுக்குமே புறவழிச் சாலை அமைக்கக்கூடிய திட்டம் பல ஆண்டுக்காலமாக நிலுவையிலே உள்ளது. அது தற்போது எந்த நிலையிலே உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2013 பிப்ரவரி 8]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடுமலைப்பேட்டை பகுதியிலே புறவழிச் சாலை அமைக்கின்ற பணி எந்த நிலையிலே இருக்கிறதென்பதை இங்கே கேட்டிருக்கின்றார்கள். தற்போது விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகின்ற நிலையிலுள்ளது. அந்தத் திட்ட அறிக்கை கிடைத்தவுடன் நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகு அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாடுதுறை தொகுதியில், மயிலாடுதுறை நகரத்தைச் சுற்றி வட்டச் சாலை அமைப்பதற்காக கடந்த இரண்டு வருடங்களாக நிலம் எடுக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எப்போது அந்தப் பணி முடிந்து அந்தத் திட்டம் நிறைவேறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை அமைப்பதற்கு நிலத்தைக் கையகப்படுத்துகின்றபொழுது நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகின்றார்கள். அதில் காலதாமதம் ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே, நிலம் எடுக்கும் பணிகள் முடிந்த பிறகுதான் புறவழிச் சாலை அமைக்கின்ற பணிகள் துவக்கப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பல ஆண்டுக்காலமாக புறவழிச் சாலை அமைக்கின்ற பணி காலதாமதம் ஆகிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2013 பிப்ரவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, வளத்தியிலிருந்து மேல்மலையனூர் செல்கின்ற சாலை பிரதான சாலையாகும். அந்தச் சாலை வழியாகத்தான் அனைத்து பக்தர்களும் செல்கின்றனர், பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சாலையில் வளத்தி அருகில் ஒரு பகுதி மிகக் குறுகிய பாதையாக, அபாயகரமான பாதையாக, அதாவது ஒரு வாகனம் சென்றால் இன்னொரு வாகனம் எதிரே வர முடியாத அளவுக்கு பிரதான நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியின் அருகில் உள்ளவர்கள் அவர்களுடைய நிலத்தைக் கொடுத்து, அந்தச் சாலையை விரிவாக்கம் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். அதற்கான ஒப்புதலையும் அவர்கள் எழுத்து மூலமாகத் தகுந்த அதிகாரிகளிடம் அங்கே அளித்திருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் அந்த நிலங்களுக்கு இழப்பீடு வழங்கி, அந்த இடத்தைக் கையகப்படுத்தி, அந்தச் சாலையை விரிவாக்கம் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற பகுதியாக இருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அங்கே சாலை குறுகி இருப்பதாகவும், அங்கே இருக்கின்ற நில உரிமையாளர்கள் தானாகவே முன்வந்து நிலத்தை அளிப்பதாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து எதிர்காலத்திலே போக்குவரத்து வாகனங்கள் தங்குதடையில்லாமல் செல்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.



2013 பிப்ரவரி 8]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையில், சிதம்பரம் தொகுதியிலே பி. முட்லூர், சி. முட்லூர் ஆகிய இரண்டு ஊர்களுக்கு இடையில் 16 கோடி ரூபாயிலே பாலம் கட்டப்பட்டு 2 ஆண்டுகள் முடிந்துவிட்டது. ஆனால், இதுவரை அது அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு, அதிலே அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து உட்பட வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்படாத நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தை திறந்து, முறைப்படி அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து உட்பட அனைத்து வாகனங்களும் அதன் வழியாகச் செல்ல அனுமதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பாலம் கட்டப்பட்டு இன்னும் திறக்கப்படவில்லை என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். விரைவாக நடவடிக்கை எடுத்து அந்தப் பாலத்தைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி நகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க தருமபுரியில் ஒரு வட்டச் சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே தேசிய நெடுஞ்சாலை புறவழியாகத்தான் சென்று கொண்டிருக்கின்றது. தருமபுரி நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இருப்பதை கண்டறிந்துதான், ஏற்கெனவே மத்திய அரசின் தேசிய

[2013 பிப்ரவரி 8

நெடுஞ்சாலை ஆணையம்மூலம் புறவழிச் சாலை அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருப்பினும், அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால் நிச்சயமாக அங்கே புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வரும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சி வளர்ந்து வருகின்ற ஒரு பேரூராட்சி. இந்தப் பேரூராட்சியானது அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற பகுதி. இங்கே கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே, வத்திராயிருப்பைச் சுற்றி ஒரு புறவழிச் சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றதோ, அந்தந்தப் பகுதிகளுக்கெல்லாம் புறவழிச் சாலைகளை அமைக்க வேண்டுமென்றுதான் அரசு எண்ணுகின்றது. ஆனால், துறைக்குக் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரைக்கும்தான் அந்தப் புறவழிச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே சுற்றுலா செல்கின்ற பயணிகள் போக்குவரத்து நெரிசலால் சிரமப்படுவதாக இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே புறவழிச் சாலை அமைக்க சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதைத் தெரிந்து அதற்குண்டான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.



2013 பிப்ரவரி 8]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தேசிய நெடுஞ்சாலை சத்தியமங்கலம்வரை விரிவுபடுத்தப்படவிருக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிய வருகிறது. கேரள மாநிலத்திலிருந்தும், கோவை, திருப்பூர் போன்ற மாவட்டங்களிலிருந்தும் தைப்பூசம் திருவிழாவுக்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் பழனிக்கு தினந்தோறும் நடந்து செல்கிறார்கள்.

அதேபோல, பங்குனி உத்திரத் திருவிழாவிற்கு தென் மாவட்டங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் திண்டுக்கல் வழியாக பழனிக்கு வருகிறார்கள். தேசிய நெடுஞ்சாலை விரிவுபடுத்தப்படும்போது இவ்வாறு பாத யாத்திரை செல்கின்ற பக்தர்களுக்கென்று தனிப் பாதை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பழனிக்கு பக்தர்கள் செல்வதற்காக தனி நடைப்பாதை அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு; கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடி இருந்து கொண்டிருக்கிறது. It is a long pending issue.

இதை நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன், சென்ற முறையும் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் குறை சொல்லவில்லை. ஆனால், சென்னையிலிருந்து களியக்காவிளை, அதாவது தமிழகத்தினுடைய எல்லைப் பகுதிக்குச் செல்வதற்கு 750 அல்லது 800 கிலோ மீட்டர் என்று வைத்துக் கொள்ளுங்கள். வள்ளியூர்வரை வந்துவிடலாம், 7 மணி நேரத்திலே வள்ளியூருக்கு வாகனத்திலே சென்றுவிடலாம். வள்ளியூரிலிருந்து 75 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மார்த்தாண்டம் செல்லவேண்டுமானால் 3 மணி நேரம் ஆகிறது. இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது. அதற்கு ஒரு மாற்று சாலை அமைக்கமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவுபடுத்தப்படவில்லை. அந்தச் சாலை சரியாக அமைக்கப்படவில்லை. அதனால் அப்பகுதி மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே, அந்தச் சாலை நெருக்கடியைப் போக்கி தக்க சாலை வசதியைச் செய்து தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பாதையில் நிறைய ஆக்கிரமிப்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு அங்கே சாலைப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை குருவிக்காரன் சாலையிலுள்ள தரைப் பாலம் நீண்டகாலமாக மிகவும் பழுதடைந்துள்ளது. அந்தப் பாலத்தை சீர் செய்யவோ அல்லது புதுப் பாலம் அமைக்கவோ மாண்புமிகு





அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தரைப் பாலம் பழுதடைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து அந்தத் தரைப் பாலத்தில் ஏற்பட்டுள்ள பழுதை நீக்குவதற்கும் அல்லது அங்கே புதுப் பாலம் அமைக்க வேண்டும் என்று ஆய்விலே தெரிய வந்தால், புதுப் பாலம் அமைப்பதற்கும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்—சித்தூர் சாலை திருக்கோவிலூர் வழியாகச் செல்கிற தேசிய நெடுஞ்சாலையாகும். நாகை, கடலூர், விழுப்புரம் மாவட்ட மக்கள் பெங்களூரு செல்வதற்கும் அந்தச் சாலையைப் பயன்படுத்துகிறார்கள். ஏற்கெனவே திருக்கோவிலூர் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கிறது. எனவே, காட்டுப்பையூரிலிருந்து அரும்பாக்கம்வரை வட்டச் சாலை அமைக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். எந்தப் பகுதிகளிலெல்லாம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளில் ஆய்வு செய்து புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலுமே, அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள நகராட்சிப் பகுதிகளில் புறவழிச் சாலைகள் படிப்படியாக

அமைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது, அதைத் தவிர்ப்பதற்காக வட்டச் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகயிருப்பின், நிதிநிலைக்கு ஏற்ப அங்கே புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**35—**

**நியாய விலைக் கடை**

***8549—திரு. செ. பெருமாள்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியம், குண்டூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மலைப் பிரதேசத்தில் பகுதிநேர அங்காடிக்குக் குடும்ப அட்டைகளைப் பிரித்தவுடன் தாய்க் கடையில் 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால் சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்றத் தொகுதி, ஏற்காடு ஒன்றியம், ஏற்காடு லேம்ப் கூட்டுறவுச் சங்கத் தாய்க் கடையிலுள்ள 259 குடும்ப அட்டைகளில் 112 குடும்ப அட்டைகளைப் பிரித்து புதிய பகுதிநேரக் கடை அமைத்தால், தாய்க் கடைக்கு 147 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தி ஆகாததால், குண்டூர் கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி திறக்கப்பட சாத்தியக் கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.*

**திரு. செ. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியம், குண்டூர் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் ஏற்காடு நியாய விலைக் கடைக்கு 5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, நியாய விலைக் கடையிலே அரிசி மற்றும் பொருட்களை வாங்க வேண்டிய சூழல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல மலைக் கிராமமாக இருக்கின்ற சூழ்நிலையில் அங்கு இருக்கும் மக்கள் தோட்ட வேலைக்குச் செல்கிறார்கள். அவர்களுக்காக அரசினுடைய விதியினைத் தளர்த்தி, ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே, பகுதிநேர அங்காடி திறப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகாத மலைப் பிரதேசங்களில், பகுதிநேரக் கடைகள் திறக்க முடியாத நிலையில், தாட்கோ நிதியுதவி பெற்று, நடமாடும் அங்காடிகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் சென்று விநியோகம் செய்ய வேண்டுமென மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி குண்டூர் கிராமத்தில் லேம்ப்

கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் தாட்கோ நிதியுதவி பெற்று நடமாடும் அங்காடி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

**திரு. செ. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு, பணிந்து அந்தப் பகுதியினுடைய மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி கானகுப்பம், மணலூர் ரோட்டுக்காலனி, சிவனந்திபுரம், கோவில்குப்பம் போன்ற பகுதிகளில் 150 கார்டுகள் இருக்கின்ற கிராமத்திற்கு பகுதிநேரக் கடை வேண்டி விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கடைகளைத் திறப்பதற்கு எந்தவிதமான சாத்தியமும் இதுவரை தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதிகளுக்குப் பகுதிநேரக் கடைகள் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கருத்துரு பெற்று, அவசியமெனில் நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியில் பகுதிநேர அங்காடியினைத் திறந்து வைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன் அவர்கள்.

**திரு. க. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக உருவாக்க அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பாதங்களை வணங்குகிறேன். திருப்போரூர் தொகுதியில், திருப்போரூர் தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிவித்து, தனது திருக்கரங்களால் திறந்து வைத்த அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியில் அடங்கிய பனங்காட்டுப்பாக்கம், பொங்கேரி, மேலேரிப்பாக்கம், நெம்மேலி, தர்ப்பாபுரம், புதுப்பாக்கம், ஜம்பேரி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகளுக்குச் செல்ல வேண்டுமானால் 4 கிலோ மீட்டர் அல்லது 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. மழைக்காலங்களில் அங்கு சென்று பொருட்களை வாங்கிவருவது சிரமமாக உள்ளதால், இப்பகுதிகளுக்கு பகுதிநேரக் கடைகளை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனவும், அக்கடைகளை அமைத்துத் தர விதிமுறைப்படி வழி இல்லையென்றாலும், விதிமுறைகளைத் தளர்த்தி இப்பகுதிகளுக்குக் கடைகளை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கும்போதே விதிமுறைகளின்படி வழி இல்லையென்று சொன்னாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைகளைப் புதிதாக அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்று கேட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கருத்துரு பெற்று, அவசியமெனில் சிறப்புக் கூற்றின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கடைகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய ஆட்சியில் திறந்து வைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

### கண்காணிப்பு மையம்

*****8560—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி சிப்காட் பகுதியில் சுற்றுச்சூழல் கண்காணிப்புக் கட்டுப்பாட்டுக் குழுமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, சிப்காட் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் புகைப்போக்கி வழியாக வெளியேற்றப்படும் புகையின் தரத்தை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் காற்று மாசு கண்காணிப்பு மையம் (CARE AIR CENTRE) மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், கூடுதல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு குழுமம் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.





**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி, சிப்காட் தொழிற்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 500 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதில் 10 தனியார் மின் உற்பத்தித் தொழிற்சாலைகள், 50 இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் மற்றும் கார்பன் மற்றும் டயர் தொழிற்சாலைகள் போன்ற மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளுடன், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் சேகரிக்கப்படும் நச்சுக் கழிவுகளைப் பதுக்கி, செயல் இழக்கச்செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. மேற்கண்ட தொழிற்சாலைகளால் காற்றில் ஏற்படும் மாசு தவிர நிலத்தடி நீரின் தன்மையும் கெட்டு வருகிறது. இதே சூழ்நிலை தொடருமானால் வருங்கால சந்ததியினர் வாழத் தகுதியற்ற பகுதியாக கும்மிடிப்பூண்டி மாறிவிடுமோ என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர். ஆகையால், நீர் மற்றும் காற்றின் மாசைக் கண்காணிக்க 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பு மையம் (Monitoring Unit) கண்டிப்பாக அந்தப் பகுதியில் தேவை என்பது அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாக இருக்கிறது. ஆகையால் இந்தப் பகுதியில் 24 மணி நேரமும் இயங்கும் Monitoring Unit அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி, சிப்காட் தொழிற்பேட்டையில் 39 சிவப்பு வகை பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. 6 சிவப்பு வகை நடுத்தர தொழிற்சாலைகள் உள்ளன. அனைத்துத் தொழிற்சாலைகளிலுமே சுற்றியுள்ள காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் பொருட்டு, ஒரு தொடர் காற்றுக் கண்காணிப்பு மையத்தினை வாரியம் அமைத்துள்ளது. வாரத்தில் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக உமிழ்வுகளில் ஏற்படும் அளவுகள் உடனுக்குடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய மையம் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததோடு, இது மத்திய அரசால் பெரிதும் பாராட்டப்பட்டது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்களின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும்போது

இம்மையத்தின் ஒலி எழுப்பான்கள்மூலம் எச்சரிக்கை மணி ஒலிப்பதோடு, அக்காற்றின் தன்மை அளவு மீறும் தொழிற்சாலைகளுக்கு மாவட்டப் பொறியாளர் மற்றும் உறுப்பினர்-செயலாளரால் உடனுக்குடன் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு குறுந்தகவல் அனுப்பப்படும். தானாக ஒலி அனுப்பும் எச்சரிக்கை மணி அனைத்துத் தொழிற்சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் அச்சம் வேண்டாம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த ஆண்டு 34 மாவட்டப் பொறியாளர்களுக்குக் கையடக்கக் கணினி வழங்கப்பட்டுள்ளது. அதனால் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொழிற்சாலைகளில் ஏற்படும் குறைபாடுகள் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதியில் உடனுக்குடன் அந்தத் தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டு, தொடர்ந்து நல்ல நிலைமை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று தேர்வாய்க்கண்டிகை சிப்காட் பகுதியில் கார்பன் தொழிற்சாலைகள் மற்றும் Tyre manufacturing units இயங்கி வருகின்றன. ஆகவே, இங்கும் 24 மணி நேரம் இயங்கும் ஒரு Monitoring unit அவசியம். அதை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாய்க்கண்டிகையில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்தில் இருக்கிற 115 காற்றுமூலம் மாசு ஏற்படுத்துகின்ற தொழிற்சாலைகளில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கண்காணிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள எந்தத் தொழிற்சாலை மாசின் அளவை மீறுகிறதோ உடனுக்குடன் அந்தத் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தப்பட்டு, மாவட்டப் பொறியாளர்கள் மற்றும் உறுப்பினர்-செயலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

**கட்டட வசதி**

***7335—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, முத்துநாயக்கன்பட்டி மற்றும் மாங்குப்பையில் கால்நடை மருத்துவ நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலங்களிலெல்லாம் பாழடைந்த, பழைய கட்டடங்களில்தான் கால்நடை நிலையங்கள் இயங்கி வந்தன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், மூன்றாவது முறை முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2011-2012 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டிய 877 கட்டடங்களில் 661 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 2012-2013 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டிய கால்நடை நிலையங்களில், 649 கட்டடங்களிலே 271 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளிலே ஏறக்குறைய 932 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வெங்கடாஜலம் அவர்கள், முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் இயங்கி வருகிறது. இங்கே கட்டடம் கட்டுவதற்கு, கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் நிதியாண்டில் 11.6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தப் புதிய கட்டடம் கட்ட சர்வே எண் 264-ல் உள்ள சந்தைப் புறம்போக்கு இடத்தில் 30 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டு, நில மாற்ற முன்மொழிவிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கு அனுமதி வந்தவுடன், கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதைக் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா' என்ற பாடல் ஒன்றுண்டு. ஆனால், கேட்காமலேயே தமிழகத்தின் ஏழையெளிய மக்களுக்குப் பல திட்டங்களை வாரி வழங்கும் வள்ளல், வருங்கால பாரதம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும் மாங்குப்பை ஊராட்சி ஒன்றியம் விவசாயிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கால்நடை வளர்ப்பையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியினரின் நீண்ட நாள் கோரிக்கையான கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மாங்குப்பை கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு 3,000 கால்நடைக் கிளை அலகுகள் இருக்க வேண்டும். 3 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு எந்த கால்நடைக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. அதற்குட்பட்டு அந்தப் பகுதி இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமநாயக்கன்பட்டி பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதேபோல முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதற்கு இடையிலே 5 கிலோ மீட்டர் தொலைவிலே மாங்குப்பை பகுதி அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாங்குப்பை பகுதிக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமாய் பணிவோடு கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறை மாவட்ட

இணை இயக்குநருக்கு இந்தப் பரிந்துரை அனுப்பப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

## கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா

***5596—முனைவர் வைகைச்செல்வன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டையில் கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்தி விடையை அளிக்கிறேன்.

அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டையில் கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நெசவாளர்களின் நிலை உயர்ந்திடவும், உற்பத்தி அதிகரித்திடவும், அருப்புக்கோட்டை பகுதியில் தொழில் முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாயின் பாதங்களில்தான் சொர்க்கம் இருக்கிறது' என்று சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அண்ணல் முகமது நபி அவர்கள் சொல்வார்கள். அத்தகைய தூய தலைவியாக வாழ்கிற, தாயாக வாழ்கிற அம்மா அவர்களை வணங்குகிறேன். அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் நெசவாளர்கள் நிரம்ப வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை, வாழ்வாதாரம் வளர்வதற்கு ஒரு கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா வேண்டுமென்று நீண்ட, நெடிய காலம் கோரிக்கை விடுத்தவண்ணம் இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கையை தாயுள்ளம் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம், கனிவுடன் பரிசீலனை செய்து, ஒரு தொழில்நுட்பப் பூங்கா ஏற்படுத்துவதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் 8,500 நெசவாளர்கள் இருக்கின்றார்கள். இதில் 5,500 நெசவாளர்கள் 22 கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், 3,000 நெசவாளர்கள் master weaver ஆகவும் தொழில் பெற்று இங்கே வாழ்ந்து வருகின்றார்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், அருப்புக்கோட்டை உள்ளடங்கிய விருதுநகர் மாவட்டத்தில், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு, விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத் திட்டத்தின் அடிப்படையில், நெசவாளர் நலனுக்காக, நெசவாளர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், இந்தத் திட்டத்தின் மூலமாக, முதற்கட்டமாக, அருப்புக்கோட்டை பகுதியில் 2011-2012 ஆம் நிதியாண்டில், 27 நெசவாளர்களுக்கு பெடல் தறிகளும், 217 நெசவாளர்களுக்கு அச்சு விழுதும், 61 நெசவாளர்களுக்கு ஜக்கார்டு பெட்டிகளும், 20 நெசவாளர்களுக்கு டாபி பெட்டியும், 199 நெசவாளர்களுக்கு தார் சுற்றும் இயந்திரமும் வழங்கப்பட்டன.

இந்த 2012-2013 ஆம் நிதியாண்டில், இரண்டாம் கட்டமாக அருப்புக்கோட்டை பகுதியில் 21 நெசவாளர்களுக்குப் பெடல்

தறிகளும், 421 நபர்களுக்கு அச்சு விழுதும், 188 நெசவாளர்களுக்கு ஜக்கார்டு பெட்டிகளும், 498 நெசவாளர்களுக்கு மின் விளக்குகளும், 184 நபர்களுக்கு தார் சுற்றும் இயந்திரமும் வழங்கப்பட இருக்கின்றன. இவை தவிர, அருப்புக்கோட்டை பகுதியில் நெசவாளர் நலனுக்காக, 10 பாவு போடும் இயந்திரங்களும், 5 பசை போடும் இயந்திரங்களும், 2 பாவு மனை இயந்திரங்களும் நிறுவப்பட உள்ளன.

அதுமட்டுமல்லாமல், நெசவுத் தொழிலுக்கு எளிதில் கட்டுப்பாடின்றி நூல் கிடைக்க நூல் வங்கியும், சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய நவீன சாயச் சாலையும், நவீன முறையில் கைத்தறியை உற்பத்தி செய்வதற்காக இரண்டு மாத பயிற்சி வழங்கும் மையங்களும், உற்பத்தி செய்த துணிகளை விற்பதற்காக பொது விற்பனை மையமும், புதிய வடிவமைப்பிற்காகத் தேவையான உபகரணங்களும், இந்த விருதுநகர் மெகா திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே, நெசவாளர்களின் நலன் கருதி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், தொழில் முனைவோர் முன்வந்தால், மேலும் கூடுதலாகத் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு விரைவில் பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு மாத்திரமல்லாமல், அருப்புக்கோட்டை பகுதியில் நெசவாளர்களுக்கு என்னென்ன உதவிகளையெல்லாம் செய்திருக்கிறோம் என்கிற பட்டியலை இங்கே எடுத்து வைத்தார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசாங்கத்திற்கு நன்றியறிதலை பொது மக்களின் சார்பாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட உதவிகளை கைத்தறி நெசவாளர்களுக்குச் செய்திருக்கிற வேளையில்—விசைத்தறி, கைத்தறி என்று இருக்கிறது. விசைத்தறி தற்போது கொஞ்சம் முதன்மையான இடத்தை





அடைந்து கொண்டிருக்கிற வேளையில், கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வாதாரத்தை மிகப் பெரிய அளவிலே கொண்டுவர வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசாங்கம் செய்திருக்கிற அந்தத் திட்டங்களையெல்லாம் பாராட்டும் விதமாகவும், நல்ல வரவேற்பை அடைந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், அவர்களுக்கு ஊருக்கு வெளியே ஒரு தொழில்நுட்பப் பூங்காவை அமைத்தால், ஒட்டுமொத்தமாக இந்தத் தொழில் மென்மேலும் வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதற்கு ஒரு சிறப்புக் கவனத்தைக் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் மொத்தம் 40 தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில், 10 தொழில்நுட்பப் பூங்காக்கள் இங்கே தமிழகத்திலே நிறுவப்பட்டிருக்கின்றன. அவை சிறப்பான முறையில் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன. கடந்த ஆண்டுகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 64 ஏக்கர் நிலப்பரப்பை, காஞ்சிபுரம் தொழில்நுட்பப் பூங்காவிற்காகக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பல்வேறு இடங்களில் இதுபோன்ற தொழில்நுட்பப் பூங்காக்களை அமைப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள். இதற்காக தொழில்முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு பரிசீலித்து, பின்தங்கிய பகுதியான அருப்புக்கோட்டை பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பகுதியில் உள்ள நெசவாளர்களுடைய முன்னேற்றத்திற்காக சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழில் முனைவோர் யாராவது ஒட்டுமொத்தமாக கூட்டுசேர்ந்து இதற்காக முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களிடம் அதுகுறித்து எடுத்துக்கூறி,

அந்தப் பகுதியினுடைய முன்னேற்றத்திற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் நடவடிக்கையினை எடுக்கும் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

**விற்பனை நிலையம்**

*__19954—திரு. எம்.கே. அசோக்:__

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் பகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியம் சார்பாக விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னித் தமிழை கணினித் தமிழாக மாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அவைக்கு விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் பகுதியில் விற்பனை மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், எதிர்காலத்தில் கோரிக்கை ஏதேனும் பெறப்பட்டால், தேவையின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.



**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட அடையாறு பகுதியில் வெளிநாட்டவர் அதிகமாக வந்து செல்லும் இடமான அன்னி பெசன்ட் அம்மையாரால் துவங்கப்பட்ட பிரம்ம ஞான சபையும், திருவான்மியூரில் அமைந்துள்ள இந்தியக் கலை மற்றும் கலாச்சார மையமான கலாஷேத்ராவும் அமைந்துள்ளன. மேலும், வெளிநாட்டவர்களைக் கவரக் கூடிய, கலைச் சிற்பங்கள் நிறைந்த மாமல்லபுரத்திற்கு நுழைவு வாயிலாக வேளச்சேரி தொகுதி அமைந்துள்ளது. அங்கு விற்பனை மையம் அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதானா? துணைக் கேள்வி இல்லையா? (குறுக்கீடு.)

வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

**சுற்றுலா மையம்**

*__5458—திரு. கு. லிங்கமுத்து:__

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியைச் சுற்றுலா மையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா எழில்மிகு மலைப் பகுதி, கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,318 அடி உயரத்திலும், வேலூரிலிருந்து 66 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. எழில்மிகு அரவட்லா மலையைச் சுற்றி சுற்றுலா மையமாக்கி, அங்குள்ள சுமார்

*10 ஏக்கர் பரப்புள்ள ஏரிப் பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது குறித்த கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை ஆகியவை பெறப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான அனுமதியோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

**திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துருவை ஆய்வுக்கு அனுப்பிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**41—**

### சொந்தக் கட்டடம்

*****5900—திரு. ஆர். சீனிவாசன்:**

*மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆற்காடு நகரத்திலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) ஆற்காடு நகரத்திலுள்ள வணிக வரித் துறை அலுவகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, ஆற்காடு வட்டம், ஆற்காடு தாஜ்புரா கிராமம் பழைய சர்வே எண் 16/3, புதிய சர்வே எண் 16/34-ல் உள்ள 4,200 சதுர அடி காலி மனை, தாஜ்புரா ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சம்பத் அவர்களால், வணிக வரித் துறைக்கு தானப் பத்திரம்மூலம் ஆற்காடு சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆற்காட்டில், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் வணிக வரி அலுவலகம் கட்டுவதற்கு ஏதுவாக வரைபடம் மற்றும் உத்தேச மதிப்பீடு ஆகியவற்றை பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்று அனுப்புமாறு, இணை ஆணையர், வணிக வரி, வேலூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

**திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் தலைவி, தமிழகத்தில் தன்னிகரில்லா ஆட்சி நடத்தி, தமிழக மக்களுக்குத் தாயாக, தெய்வமாக இருந்து தமிழக மக்களைக் கட்டிக் காத்து, நூறு ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனைகளை ஓராண்டில் செய்து முடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனைப் புரிந்து வருகின்ற மனிதப் புனிதர் மாணிக்கத் தலைவியாம், நாங்கள் அன்றாடம் வழிபடும் எங்கள் குடும்ப தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில், ஆற்காடு நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கிய எங்கள் தெய்வத்தின் தெய்வத்திற்கு கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**42—**

## இயக்குநரகம்

**8126—திரு. க. பாலகிருஷ்ணன்:*

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் கல்வி நிலையங்களை மேற்பார்வையிடவும், கல்விப் பயிற்சி அளிக்கவும் தனி கல்வி இயக்குநரகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,095 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும், 299 பழங்குடியினருக்கான அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளும், ஆக மொத்தம் 1,394 பள்ளிகள் இயங்கி வருகின்றன. விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள இத்துறைப் பள்ளிகளை ஆய்வு செய்திட தலா 2 உதவிக் கல்வி அலுவலர்களும், வேலூர், திருச்சி, தஞ்சாவூர், சேலம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை ஆய்வு செய்திட தலா ஒரு உதவிக் கல்வி அலுவலரும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மண்டல உதவிக் கல்வி இயக்குநர், 14 மாவட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளை ஆய்வு செய்து பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கான பணிகளைத் தொடர்ந்து மேற்பார்வையிட்டு வருகிறார். கல்வி சம்பந்தமான அனைத்துப் பணிகளையும் கவனித்திட ஆதி திராவிடர் நல ஆணையரகத்தில் ஒரு உதவிக் கல்வி இயக்குநர் மற்றும் ஒரு துணைக் கல்வி இயக்குநர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அப்பணியிடங்களில் இத்துறை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணி நிலையில் பணி மூப்பின் அடிப்படையில் நிரப்பப்பட்டு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பள்ளிக் கல்வி இயக்ககத்தின்மூலம்



நடத்தப்பட்டு வரும் கல்வி சம்பந்தமான அனைத்துப் பயிற்சிகளும், அனைவருக்கும் கல்வித் திட்டத்துடன் (Sarva Siksha Abhiyan) SSA சேர்ந்து கல்வித் துறைப் பள்ளிகளுடன் இணைந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கல்விப் பிரிவிற்கென தனியே இயக்குநரகம் அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்தின் அடித் தட்டில் உள்ள ஆதி திராவிட மக்களைக் கைதூக்கி விடவும், கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிட மாணவர்களுக்குக் கல்வி அறிவைப் புகட்ட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் 1,394 பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில்கூட நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ஆதி திராவிட மக்களுடைய நலனைப் பாதுகாத்து மேலும் பலப்படுத்துவதற்காக கூடுதலான நிதியை ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. இந்தப் பள்ளிகளில் மட்டும் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 376 மாணவ, மாணவியர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். 9,116 ஆசிரியர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையின்கீழ் சற்றேறக்குறைய 1,616 விடுதிகள் நடைபெற்று வருகின்றன. 6,953 விடுதி ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இப்படிப்பட்ட மிக அதிக எண்ணிக்கையில் இருக்கிற, அடித்தட்டு மக்களாக இருக்கிற, ஆதி திராவிட மாணவர்களுக்கு, இவ்வளவு வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தாலும்கூட அந்தப் பள்ளிகளைச் சோதனை செய்ய, அந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க, அந்தக் கல்வியை மேலும் விஞ்ஞான ரீதியிலே புகட்டுவதற்கான நிர்வாக ஏற்பாடு இப்போது போதுமான அளவுக்கு இருக்கிறதா என்று சொன்னால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளையும் மேற்பார்வையிடுவதற்கு ஒரே ஒரு மண்டல துணை இயக்குநர்

பதவிதான் தற்போது இருக்கிறது. அதாவது, 1,394 பள்ளிகளையும் மேற்பார்வையிடுவதற்கு ஒரே ஒரு மண்டல துணை இயக்குநர் பதவிதான் இப்போது இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், 6 A.E.O.-க்கள்தான் தமிழ்நாடு முழுவதற்குமான பள்ளிகளுக்கு துணைக் கல்வி இயக்குநர்களாக இருக்கிறார்கள். ஆனால் பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், வட்டாரத்திற்குத் தனி அலுவலகம், மாவட்டத்திற்கு தனி அலுவலகம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஆகவே, இதனால் அந்த அடித்தட்டிலே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கான கல்வி என்பதை தரத்தோடு வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை. இந்த ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகப் படித்த மாணவர்கள் ஒருவர்கூட மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்யப்படவில்லை என்பதும், அதேபோல, தற்போது T.R.B.C. மூலம் நடத்தப்பட்ட தேர்விலே இம்மாணவ, மாணவியர்கள் சரியாகத் தேர்ச்சி பெறாத காரணத்தினால், 600-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, இந்த நிருவாக ஏற்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்கு, விடுதலைக்குப் பிறகு 65 ஆண்டுகள் ஆகி இந்த நிலைமை முடிவுறுவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன், சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** தனியாக கல்வி இயக்குநரகத்தை நிர்மானித்து, அதிகமான கல்வி இயக்குநர்களை, கல்வி பயிற்சியாளர்களை, ஆசிரியர்களைப் பணி உயர்த்திட அரசு முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் தொடக்கப் பள்ளிகள் 997, நடுநிலைப்





பள்ளிகள் 194, உயர்நிலைப் பள்ளிகள் 103, மேல்நிலைப் பள்ளிகள் 100, ஆக மொத்தம் 1,394 பள்ளிகள் இயங்கி வருகின்றன. தற்போது, இத்துறை அலுவலர்களைக் கொண்டே அப்பள்ளிகளை ஆய்வு செய்திட தேவையான பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருப்பினும், வரும் காலங்களில் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆலோசனையைப் பெற்று, முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் இந்தப் பள்ளியினுடைய கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஒரு நிபுணர் குழுவையாவது அமைத்து, அடுத்து என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையாவது அரசு பரிசீலனை செய்ய வேண்டும். தற்போது, ஆதி திராவிடர் நலத் துறை அதிகாரிகள் மூலமாக கல்வியின் தரம் கண்காணிக்கப்படும் நிலை உள்ளது. அவர்களுக்கும், கல்விக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. கல்விக்கான பயிற்சியும் அவர்களுக்கு இல்லை. ஒரு அதிகாரியைக்கொண்டு கல்வியின் தரத்தை உயர்த்துவது சாத்தியமேயில்லை. எனவே, செய்ய வேண்டிய காரியங்களுக்கு ஒரு நிபுணர் குழுவையாவது அமைத்து, ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, இனி வருங்காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

[2013 பிப்ரவரி 8

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமாக நிலமோ, தொழிலோ பெருமளவிற்குக் கிடையாது. அவர்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு, மேம்பாட்டிற்கு அடித்தளமாக இருக்கக்கூடியது கல்வி மட்டும்தான். ஆகவேதான் அந்த மக்களைக் கல்வியின் வழியாக எப்படியும் தேற்றுவதற்கு அரசு சிறப்பான உரிமைகளையும், சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று அண்ணல் அம்பேத்கர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அந்த வழியிலே சாதிகளைக் கடந்த, சமூக நீதியின் தேவதையாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்த மக்களுடைய நம்பிக்கை ஊற்றாக, தாழ்த்தப்பட்ட மக்களுடைய, அடித்தட்டு மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தத் துறைக்கென தனி இயக்குநரகத்தை அமைக்கவேண்டும். 1,300-க்கு மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகள் தொடங்கப்பட்டு 75 ஆண்டுக்காலத்திற்கு மேலாகின்றது. பிரிட்டிஷ் காலத்திலே தொடங்கப்பட்ட பள்ளிகள் ஆகும். கல்வித் துறையிலே, பள்ளிக் கல்விக்கு இயக்குநரகம் இருக்கிறது, தொடக்கக் கல்விக்கு இயக்குநரகம் இருக்கிறது, முறைசாரா கல்விக்கு இயக்குநரகம் இருக்கிறது, மேல்நிலைக் கல்விக்கு இயக்குநரகம் இருக்கிறது. தொழில்நுட்பக் கல்விக்கு இயக்குநரகம் இருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளை உள்ளடக்கிய, ஏறக்குறைய ஆதி திராவிடர் நிதிநிலையிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், உங்கள் கேள்வியை சீக்கிரம் கேளுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் கேட்டுவிடுகிறேன். ஆதி திராவிடர் நிதிநிலையிலே 75 சதவிகிதத்தை இதற்காகவே ஒதுக்க வேண்டிய நிலையில், இதற்கென்று ஒரு இயக்குநரகத்தை "Directorate for Adi Dravidar Schools" என்கிற வகையிலே, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்காக ஒரு கல்வி இயக்குநரகத்தை உருவாக்கிட வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 பிப்ரவரி 8]

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

## மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்

***1625—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்திலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாசலம் தொகுதி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு விருத்தாசலம், பெரிய வடவாதி கிராமத்தில் 1.53 ஹெக்டேர் நிலத்தில் சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் பேருந்து தளம் கட்டுவதற்கு, ஒரு கோடியே, 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு, சிமென்ட் பூச்சு வேலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

**திரு. வி. முத்துக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுலவகம் வேண்டுமென்று முதல் கூட்டத் தொடரில் கோரிக்கை வைக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில்தான் பணி தொடங்கப்பட்டு, தற்போது இரண்டு மாத காலமாகப் பணிகள் நடைபெறவில்லை. பணிகள் மிகவும் மந்தமான நிலையில் நடைபெற்று கொண்டிருக்கின்றன. ஆகையால், விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு மண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இப்போது மோட்டார் வாகன அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்தப் பகுதி, கிராமப் பகுதிகளைக் கொண்டதால் மதியம் 12.00 மணி முதல் 3.00 மணி வரை மின்சாரத் தடை உள்ளதால் பணிகள் தடைப்படுகின்றன. அதிகாரிகள் எந்தப் பணிகளையும் செய்ய இயலாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். ஆகையால், மிக முக்கியமாக அவர்களுக்கு ஒரு ஜெனரேட்டர் உடடினயாக வழங்க வேண்டும். அடுத்தபடியாக ரெக்கார்டு ரூமில் ரேக் இல்லாத நிலையில், முக்கியமான ஆவணங்கள் தரையில் வைக்கப்படுகின்றன. பொதுமக்கள் அமர்வதற்கு ஒரு பெஞ்சுகூட இல்லை. பொதுமக்கள் வெயிலில் நிற்கின்றார்கள். ஆகையினால் இந்த நிலைமையைப் போக்க, உடனடியாக அந்த வாடகைக் கட்டடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய அரசியல் வரலாற்றில் போக்குவரத்துத் துறைக்குப் புத்துயிரூட்டி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 52 மோட்டார் வாகன ஆய்வாளர்கள், வாகனச் சோதனைக்குச் செல்கிறபோதும் சரி அல்லது விபத்துகள் ஏற்படுகிறபோது, அதை ஆய்வு செய்யச் செல்கிறபோதும் சரி, அவர்கள் தங்களுடைய இரு சக்கர வாகனத்தில் செல்கின்ற நிலையை மாற்றி, 52 மோட்டார் வாகன ஆய்வாளர்கள்*





*அனைவருக்கும் ரூபாய் இரண்டு கோடியே 86 இலட்சம் நிதியைக் கொடுத்து, புதிதாக ஜீப்புகளை வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) விரைவில் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்குண்டான அந்த ஜீப்புகள் வழங்கப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த ஒன்றரை ஆண்டுகளில் 11 அலுவலகக் கட்டடங்கள், 3 ஓட்டுநர் தேர்வுத் தளங்கள், ஒரு சோதனைச் சாவடிக்குண்டான கட்டடம் என ரூபாய் 9 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அனைத்து வசதிகளுடன்கூடிய கட்டடங்களாக, பொது மக்களுடைய பயன்பாட்டிற்குண்டான இருக்கைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட கட்டடங்களாக மக்களுடைய பயன்பாட்டில் இன்று இயங்கி வருகின்றன.*

*அதேபோன்று, கூடுதலாக 4 புதிய ஓட்டுநர் தேர்வுத் தளங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குண்டான 4 கட்டடங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கான 5 கட்டடங்கள் என 12 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி, இந்தக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் இருக்கிற அனைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்குண்டான அனைத்துக் கட்டடங்களும் அனைத்து வசதிகளையும் பெற்று முழுமையாக சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, படிப்படியாக இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. விரைவில், குறிப்பாக இரண்டு மாத காலத்தில் தங்களுடைய பகுதியில் இருக்கிற அந்தக் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் முடிவடைய நிச்சயமாக 7 மாத காலம் ஆகும். ஏனென்றால், இரண்டு மாத காலம் பணியே நடைபெறவில்லை. நிச்சயம் 7 மாத காலம் ஆகும். ஆகையால், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அந்தக் கட்டடத்திற்கு ஜெனரேட்டர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும். மக்கள் அமரக்கூட இடம் இல்லை. இந்த 7 மாத காலத்திற்காவது போதுமான வசதிகளை அந்த மக்களுக்கு ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கி வருகிற அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இரண்டு மாத காலத்தில் அந்தக் கட்டடப் பணியை முடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதி மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஏற்கெனவே இருக்கிற அலுவலகங்களில் மக்களுக்குத் தேவையான வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு நிச்சயம் விரைவில் செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.





**44—**

**நூலகம்**

*782—**திரு. கே.பி. கந்தன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரை கிராமப் பகுதியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரை ஊராட்சிப் பகுதியில் நூலகம் திறக்க நூலக ஆணைக் குழு நிபந்தனைகளை ஊராட்சி மன்றத் தலைவர்மூலம் நிறைவேற்றித்தரும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) புதிய நூலகம் திறக்க வேண்டுமென்றால் அங்கே நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் ஆணையக் குழுவிற்கு வழங்க வேண்டும்; சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலிமனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்; தலா ரூ.1,000/-வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்; நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-, ஆண்டுத் தொகை ரூ.5/- ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்; சுமார் ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளை மாண்புமிகு உறுப்பினர் ஏற்படுத்திக் கொடுக்கும்பட்சத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைவில் அந்தப் பகுதியில் நூலகம் திறக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.

**திரு. கே.பி. கந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீலாங்கரையில் நூலகம் அமைத்துத் தர 5 நிபந்தனைகளை நிறைவேற்றித் தருவேன் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்த முடியாத தண்ணீர், உண்ண முடியாத உணவு, வாசமில்லாத சந்தனம், பேசக்கூடாத உண்மை இவை இருந்தும் பயன் இல்லை. அதைப்போல, நான் தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தும் பயனில்லை என்ற நிலையில் தொகுதி மக்களின் நன்மை கருதியும், நன்றி உணர்வை மறந்து விடாதே என்று என் மனசாட்சி கூறியதாலும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைச் சந்தித்து— சந்தித்து என்பதைவிட தரிசனம் செய்து, (குறுக்கீடுகள்) சந்தித்து என்பதைவிட தரிசனம் செய்து தமிழகத்திலே மிகவும் பிற்பட்ட தொகுதியான என் திட்டக்குடி தொகுதியின் தேவைகளைப் பற்றிய கோரிக்கைகளை நான் அளித்தேன். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுக்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் என்னிடம் கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த ஒரு தரிசனத்திலேயே மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எந்த ஒரு தலைவருக்கும் இல்லாத நல்ல குணமுண்டு என்பதை நான் தெரிந்துகொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)





மாண்புமிகு அம்மா அவர்கள் என்னிடம், 'தம்பி, நீங்கள் உங்கள் தொகுதி சம்பந்தமாக எப்போது வேண்டுமானாலும் என்னைச் சந்திக்கலாம்' என்று சொன்னபோது (மேசையைத் தட்டும் ஒலி) என் உடலில் தெய்வ சக்தி பாய்ந்தது போன்ற உணர்வை அறிந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களிடம் நான் அளித்த கோரிக்கைகள் தற்போது ஒவ்வொன்றாக நிறைவேறிக்கொண்டு வருகின்றன.

முதலில் எனது திட்டக்குடி தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட ரூபாய் 4.2 கோடியும், நீதிபதிகள் குடியிருப்பு கட்ட ரூபாய் 71.50 இலட்சம் நிதியாக வழங்கியபோது வள்ளலின் வாரிசு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை நான் மனதார உணர்ந்து கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலுள்ள பெண்ணாடம் பேரூராட்சி சோழன்நகரில் பல்லாண்டுகாலமாக மனைப் பட்டா இல்லாமல் தவித்து வரும் ஏழை ஆதி திராவிட பொதுமக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தற்போது 400 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா கிடைக்க (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் கையகப்படுத்தி துரிதமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. 60 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு மனை வேண்டி போராடிய ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா கிடைப்பதை நினைக்கும்போது ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை நான் மனதார உணர்ந்து கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மக்களின் சுகாதார வாழ்வு மிகவும் சிறப்பாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் என் தொகுதியில் பெண்ணாடம் பேரூராட்சிக்கு ரூபாய் 23 கோடிக்கு மேல் நிதியுதவி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பார்க்கின்றபோது மக்களைக் காப்பாற்றும் ஒரே காவல் தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 பிப்ரவரி 8

மக்களைக் காப்பாற்றும் ஒரே காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பது நமக்கு நன்றாகவே தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கு எது வேண்டுமானாலும் கேட்டால்தான் கிடைக்கும். ஒருவரிடம் உதவி வேண்டுமென்று சொன்னால் பலமுறை நடக்க வேண்டியுள்ளது. நடையாக நடந்தால்தான் உதவி கிடைக்கும். அல்லது கிடைக்காமலும் போகலாம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களை நான் ஒரே ஒரு முறைதான் தரிசனம் செய்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) உடனே என் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களை நான் பல முறை தரிசிக்க வாய்ப்பு கிடைத்தால், எனது தொகுதி தமிழகத்திலுள்ள தொகுதிகளில் முதன்மைத் தொகுதியாக மாறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு அந்த நல்ல வாய்ப்பினை வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களைத் தரிசித்த பின், என் தொகுதி மக்கள் எனக்கு அளிக்கின்ற மரியாதையே தனியாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பேரும் புகழும் பெற வேண்டும், தொகுதி மக்களுக்கு நல்லதையே செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் என் வழியைத் தொடருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாரும் உறுப்பினரைப் பார்த்துப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) யாரும் உறுப்பினரைப் பார்த்து பேசக்கூடாது. யாரும் உறுப்பினரைப் பார்த்து நேரடியாகப் பேசக்கூடாது, கடுமையான நடவடிக்கை எடுப்பேன். (கூச்சல்-குழப்பம்) இடத்தில் அமருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அவரவர்கள் இடத்தில் அமர வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் அவரவர்கள் இடத்தில் அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) யாரும் நேருக்கு நேராகப் பேசக்கூடாது. (கூச்சல்-குழப்பம்)



2013 பிப்ரவரி 8]

உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) அவரவர் இடத்தில் அமராமல் கூச்சலிடும் உறுப்பினர்களை காவலர்கள் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) கூச்சலிடும் தே.மு.தி.க. உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைத் தாக்குவது தவறு. தாக்கும் உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) தே.மு.தி.க. உறுப்பினர்கள் அனைவரையும் காவலர்கள் உடனடியாக வெளியேற்றவும். (கூச்சல்-குழப்பம்) காவலர்கள் அவர்களை உடனடியாக வெளியேற்றவும். (கூச்சல்-குழப்பம்) தகராறில் ஈடுபட்டிருக்கின்ற அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) காவலர்கள் அவர்களை உடனே அப்புறப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். விரைவாக அவர்களை அப்புறப்படுத்தவும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள், அரசு செய்துள்ள திட்டங்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவரைத் தாக்கும் வகையிலே சென்று தாக்கியது மிகவும் கண்டிக்கத்தக்கது. அவர்கள் அனைவரையும் இன்று அவையில் இருந்து வெளியேற்றும்படி காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(கூச்சலிட்டுக் கொண்டிருந்த தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(வெளியேற்றப்பட்ட தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் லாபியிலிருந்தபடியே கோஷமிட்டனர்.)

லாபியில் நின்று யாரும் கோஷம் போடக்கூடாது. லாபியிலிருந்து கோஷமிடுவதை காவலர்கள் அனுமதிக்க வேண்டாம். லாபியிலிருந்து அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள், இந்த மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்

[2013 பிப்ரவரி 8

ஆவார்கள். அவர்களுடைய மனசாட்சிப்படி அவர்களுடைய கருத்தை இங்கே சொல்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் தமிழழகன் அவர்கள் பக்குவமாக, மனசாட்சிப்படி யாரையும் புண்படுத்தும்விதமாக இல்லாமல் மிகவும் தெளிவாக, கண்ணியமாக தன்னுடைய உரையை இங்கே நிகழ்த்தினார்கள்.

*(அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் லாபியிலிருந்து தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியில் நின்று யாரும் கோஷம் போட வேண்டாம். அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) லாபியிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தவும். உடனடியாக அவர்களை அப்புறப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக அமரவும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மிகவும் கண்ணியமான முறையில் திரு. க. தமிழழகன் அவர்கள் தங்களது உரையை நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது, தே.மு.தி.க. கொறடா திரு. வி.சி. சந்திரகுமாரும், தே.மு.தி.க. உறுப்பினர்களும் சேர்ந்துகொண்டு அவரைக் கடுமையான, கொச்சை வார்த்தைகளில் திட்டி, மிகவும் பயங்கரமாக அவரைத் தாக்க முற்பட்டபோது, திரு. மைக்கேல் ராயப்பன் அவர்கள் தலையிட்டு அவர்களை சமாதானம் செய்கின்றபோது, திரு. மைக்கேல் ராயப்பனை திரு. வி.சி. சந்திரகுமாரும் மற்றவர்களும் அடித்த காட்சியை நாம் இன்றைக்கு நேரடியாகவே பார்த்தோம். இது உண்மையிலேயே வெட்கப்படக்கூடிய, வேதனைப்படக்கூடிய விஷயம். இம்மாதிரி நிகழ்ச்சிகள் இனிமேலும் தொடரக்கூடாது. தொடரக்கூடாது என்றால், இன்று ஒழுங்கீனமாக, காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்ட தே.மு.தி.க. உறுப்பினர், கொறடா திரு. வி.சி. சந்திரகுமாரையும், அவரோடு சேர்ந்துகொண்டு தாக்கிய அத்தனை உறுப்பினர்களையும்



2013 பிப்ரவரி 8]

கடுமையான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு அவையிலே கலவரத்திலே ஈடுபட்ட தே.மு.தி.க. உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. எல். வெங்கடேசன், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், திரு. சி.எச். சேகர், திரு. வி. முத்துக்குமார் ஆகியோரின் செயல் அவையினுடைய கண்ணியத்திற்கு ஒவ்வாத செயலாக இருக்கிறது. அந்தக் காட்சியை வீடியோவில் பார்வையிட்டு, அவர்கள் மட்டுமல்லாமல் அதில் யாரெல்லாம் தகாத முறையில் ஈடுபட்டார்களோ அவர்கள் அத்தனை பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க சட்டமன்றப் பேரவை விதி 226-ன்கீழ் அவர்கள் அனைவரின் செயல் குறித்து அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை என்னுடைய உத்தரவாக இங்கே அறிவிக்கிறேன்.

திரு. க. தமிழழகன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கு உணவு வேண்டி ஒருவர் கேட்கும்போது, உணவு கொடுத்தால் கண்டிப்பாக மனசாட்சி உள்ளவர்கள் நன்றி சொல்வதுண்டு, ஆனால், எனது தொகுதிக்கே உணவு கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பாராட்டுவதில் என்ன தவறு இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மனிதாபிமானத்தில்தான் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொன்னேன். அந்த நன்றி கெட்டவர்கள் தவறு என்று சொல்லி வெளியே சென்றுவிட்டார்கள், அவர்களுக்கும் சேர்த்து நான் நன்றி சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை நான் சந்தித்த பிறகு எனது தொகுதி மக்கள் எனக்கு அளிக்கின்ற மரியாதையே தனியாக உள்ளது. பெயரும், புகழும் பெற வேண்டும். நான் தொகுதி மக்கள்

அனைவருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் என் பின்னால் வாருங்கள் என்று சொன்னேன். தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர் வாருங்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்களாகவே தானாக தூக்கிப் போட்டுக்கொண்டு இந்த அவைக்கு ஒரு குந்தகத்தை விளைவித்துவிட்டார்கள்.

மத்திய அரசு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசிற்கு அளிக்க வேண்டிய சலுகைகள் யாவையும் சரியான அளவிலே வழங்கப்படாத நிலையிலும், தமிழகத்தை இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சபதம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைப் பார்த்து நான் வியப்படைகிறேன். தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தாலே மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களும், அவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளைப் பற்றித்தான் செய்திகள் வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தைரியத்திற்கும், திறமைக்கும் நான் தலை வணங்குகிறேன் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) எனது திட்டக்குடி தொகுதியின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன் அம்மா.

*முற்பகல் 11-55*

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது பணிவான வேண்டுகோள். ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்திருக்கும் பல்நோக்கு நவீன மருத்துவமனைக்கு தமிழக மக்களின் இதயத்தில் குடியிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்ட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நூறு ஆண்டு சாதனை செய்தவர் அம்மா அவர்கள்தான் என்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் *45*, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 5 வரை)@

### பட்டியல் 1

**1—**

### சார்நிலைக் கருவூலம்

**வினா எண் 21350—திரு. தோ.பெ. பூனாட்சி:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் தொகுதி, மணச்சநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:**

ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு சார் நிலைக் கருவூலம் என்ற அடிப்படையில் மணச்சநல்லூர் வருவாய் வட்டத்திற்கென புதிய சார்நிலைக் கருவூலம் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**2—**

### ஓய்வூதியம்

**வினா எண் 22737—திரு. ஜே.ஜி பிரின்ஸ்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுத் துறை மற்றும் அரசு நிதியுதவி பெறும் நிறுவனங்களில் குறைந்தபட்சம் இரு வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:**

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978-ன்படி அரசு அலுவலர் ஒருவர் குறைந்தபட்ச ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிபெற அவர் ஓய்வூதியத்திற்குத் தகுதியான அரசுப் பணியில் 1-4-2003-க்கு முன்னர் பணியில் சேர்ந்து, ஓய்வு பெறும் போது 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் தகுதிப் பணி முடித்திருக்கவேண்டும் 1-4-2003-க்குப் பின்னர் அரசுப் பணியில் சேருபவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (Contributory Pension Scheme) நடைமுறையில் உள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில், அரசுத் துறை மற்றும் அரசு நிதியுதவி பெறும் நிறுவனங்களில் குறைந்தபட்சம் இரு வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நிலை எழாது.

**3—**

**பணி ஊதியம்**

**வினா எண் 22858—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் துணைச் செயலாளர்களின் பணி ஊதியம் அவர்களுக்கு இரண்டு படி கீழ்நிலையில் பணியாற்றும் பிரிவு அலுவலர்களின் ஊதிய அளவிலேயே சமமாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அவ்வாறெனில் இந்த முரண்பாட்டைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அலுவலர் குழு 2009-ன் பரிந்துரையின் அடிப்படையில் அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்கள் 1-1-2006 முதல் கருத்தியலாகவும் 1-1-2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் திருத்தம் செய்து அரசாணை (நிலை) எண் 234, நிதித் துறை நாள் 1-6-2009-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆணையின்படி தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் பிரிவு அலுவலர், சார்புச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர் ஊதிய விகிதங்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.





| வ. எண் | பதவியின் பெயர் | முந்தைய ஊதிய விகிதம் | திருத்திய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | பிரிவு அலுவலர் | ரூ.6500-11100<br><br>ரூ.8000-13500 (12-12-2007 முதல்) | ரூ9300-34800 + தர ஊதியம் ரூ.4700/-<br><br>ரூ.15600-39100 + தர ஊதியம் ரூ.5400/- (12-12-2007 முதல்) |
| 2. | சார்புச் செயலாளர் | ரூ.10000-15200 | ரூ.15600-39100 + தர ஊதியம் ரூ.6600/- |
| 3. | துணைச் செயலாளர் | ரூ.12000-16500 | ரூ.15600-39100 + தர ஊதியம் ரூ.7600/- |

திருத்திய ஊதிய விகிதத்தில் தனி ஊதிய விகிதம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக நான்கு ஊதிய கட்டுக்குள் (Pay Bands) திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், திருத்திய ஊதிய விகிதத்தில் ஒரு பணியிடத்திற்கும், உயர் பணியிடத்திற்கும் உள்ள வித்தியாசம் அப்பணியிடத்தின் தர ஊதியத்தின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, பிரிவு அலுவலர் மற்றும் துணைச் செயலாளர் ஒரே ஊதிய கட்டில் திருத்திய ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், பிரிவு அலுவலர் தர ஊதியம் ரூ.5400/- மற்றும் துணைச் செயலாளர் தர ஊதியம் ரூ.7600/- என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய பணியிடங்களின் ஊதிய அளவு சமமாக உள்ளது என்று கருத இயலாது.

**4—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 8442—திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 பிப்ரவரி 8

*(அ) கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுதுநீக்கித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**5—**

**வீடுகள் சீரமைப்பு**

**வினா எண் 17399—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆதி திராவிடர் குடியிருப்புகளில் பழுதான வீடுகளைச் சீரமைக்க சிறப்பு நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*



2013 பிப்ரவரி 8]

**6—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 21778—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், திசைவிளக்கு ஊராட்சி, பெரியப்பட்டி அருந்ததியர் தெரு, தொப்பப்பட்டி அருந்ததியர் காலனி, சேவான்வளவு ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகளை பழுதுநீக்கித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**7—**

**பசுமை வீடுகள்**

**வினா எண் 22510—திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரூர் வட்டம், வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, பாளையம் கிராமத்திற்கு அரசின்மூலம் பசுமை வீடுகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*2012-2013 ஆம் ஆண்டைய முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு 7 பசுமை வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 3 பசுமை வீடுகள் பாளையம் கிராமத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

**8—**

## வேலைவாய்ப்பு பயிற்சிகள்

**வினா எண் 16027—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் குடிசைப் பகுதிகளில் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 2011-2012 ஆம் ஆண்டில் பல்வேறு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதா?*

*(ஆ) ஆம் எனில், என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்பட்டன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) குடிசைவாழ் மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 13-வது நிதிக் குழுவின்படி, சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின்கீழ் 380 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.*

*(ஆ) செவிலியர் உதவியாளர், மின்சக்தி தையல் மற்றும் நாகரிக உடை தயாரித்தல், அடிப்படை கணினி, டேலி மற்றும் டெஸ்க்டாப் பப்ளிஷிங், கைபேசி பழுது பார்த்தல், இரண்டு சக்கர வாகனம் பழுது பார்த்தல், கணினி வன்பொருள் பராமரித்தல், கணினி மற்றும் நிதி மேலாண்மை பட்டயம், கனரக ஊர்தி இயந்திரங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல், உணவு தயாரித்தல், உணவு மற்றும் குளிர்பானங்கள் தயாரித்தல், வெள்ளி கொலுசு தயாரித்தல் மற்றும் ரேடியோகிராபி உதவியாளர் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.*



**9—**

## மாற்றுத் திறனாளிகளின் உதவித் தொகை

**வினா எண் 15270—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில், உதவித் தொகை கிடைக்கப் பெறாத மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*2011-2012 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், கடுமையாக 75 சதவிகிதத்திற்குமேல் பாதிக்கப்பட்ட 11,269 மாற்றுத் திறனாளிகள் மற்றும் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத 60 சதவிகிதத்திற்கு மேல் உள்ள மனவளர்ச்சி குன்றியோர் 77,112 நபர்களுக்கும் 40% மேல் தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 1,519 நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 496 நபர்களும், 60% மேல் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 3,962 நபர்களும், 40% மேல்*

[2013 பிப்ரவரி 8

*தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 15 நபர்களும் உதவித் தொகை பெற்று வருகின்றனர். இதர மாற்றுத் திறனாளிகள், வருவாய்த் துறைமூலம் 2,463 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் உதவித் தொகை வழங்கப்படும்.*

**10**—

## பராமரிப்பு உதவித் தொகை

**வினா எண் 17271—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மனவளர்ச்சி குன்றியோருக்கு பராமரிப்பு உதவித் தொகை திட்டத்தில் அறுபது சதவீதத்திற்கும் குறைவான அளவில், மனவளர்ச்சி குன்றியவர்களும் பயன்பெற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**விடை**—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) அரசாணை (நிலை) எண் 95, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 20-7-2012-ன்படி மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊனத்தின் சதவிகிதம் 60-லிருந்து 45 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி 45 சதவீதம் மற்றும் அதற்குமேல் மனவளர்ச்சி குன்றியோருக்கு மாதந்தோறும் ரூ.1,000/- பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படும்.*

*(ஆ) வினா எழவில்லை.*



2013 பிப்ரவரி 8]

**11**—

## திருமண நிதியுதவி

**வினா எண் 17279—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஊனமுற்ற நபருக்கு / ஊனமுற்ற நபரின் மகன் அல்லது மகளின் திருமணத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியை ரூ.50,000/-மாக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) பார்வையற்ற கை கால் பாதிக்கப்பட்ட, செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளியை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை ரூ.25,000/- உடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. மேலும் பட்டம் / பட்டயம் படித்திருந்தால் திருமண உதவித் தொகை ரூ.50,000/-த்துடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளி நபரின் மகன் அல்லது மகளின் திருமணத்திற்கு நிதியுதவியை ரூ.50,000/-மாக உயர்த்தி வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**12**—

## துல்லியப் பண்ணையம்

**வினா எண் 13235—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2013 பிப்ரவரி 8

தமிழ்நாட்டில் துல்லியப் பண்ணையம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத்தை பரவலாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் துல்லியப் பண்ணையம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத்தை பரவலாக்க தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நுண்ணீர்ப் பாசன இயக்கம் ஆகிய திட்டங்கள் உள்ளன.

தமிழகத்தில் துல்லியப் பண்ணையத் திட்டம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தோட்டக் கலைத் துறையின்மூலம் 2008-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 25,516 எக்டேர் பரப்பளவில் ரூ.7820.262 இலட்சம் நிதியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டு, இத்திட்டம் 2,858 எக்டேர் பரப்பளவில் ரூ.600.18 இலட்சம் நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ் ஒரு எக்டேருக்கு மானியமாக ரூ.15,000 மதிப்புடைய நீரில் கரையும் உரங்கள் ரூ.5,000 மதிப்புடைய விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத்திலிருந்து சொட்டுநீர்ப் பாசனமும் நிறுவப்படுகிறது. பயனாளி விவசாயிகளுக்கு இரு நாள் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 2005-2006 முதல் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் 65 சதம் மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசின் முயற்சியின் பயனாக, நுண்ணீர் பாசனத் திட்டம் நிறுவ சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் இதுவரையில் 24,400 எக்டேர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் ரூ.7310.50 இலட்சம் நிதி செலவினத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டில் 70,000 எக்டேர் பரப்பளவில் ரூ.40,966.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



2013 பிப்ரவரி 8]

**13—**

## அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 15214—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-2012 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்மூலம் பணிகள் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2011-2012 ஆம் ஆண்டிற்கு மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்த ரூ.2,277.00 இலட்சங்களுக்கு திட்டப் பணிகள் மேற்கொள்ள துறைவாரியாக தொடர்புடைய துறைகளிடமிருந்து திட்டப் பிரேரணைகள் பெறப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்புடைய முக்கிய திட்டப் பிரேரணைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அவற்றுக்கான ஆண்டுத் திட்டம் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, அதற்கான பணிகளை துறை வாரியாக மேற்கொள்ள அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**14—**

## விவசாயிகளுக்கு ஆலோசனை

**வினா எண் 16575—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழிக்க அரப்புமோர் கரைசல் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரப்புமோர் கரைசல் பயன்படுத்துவது தமிழ்நாட்டில் நடைமுறையில் இல்லை. கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் மத்திய பூச்சிக்கொல்லி கழகம் ஆகியவைகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் பயன்படுத்திட பரிந்துரை செய்யப்படுகிறது. மேலும், மானாமதுரை தொகுதியில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழிக்க அரப்புமோர் கரைசலுக்குப் பதிலாக உயிரியல் காரணிகள் மற்றும் தாவர பூச்சிக் கொல்லி மருந்து பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. மேலும் உயிரியல் மற்றும் தாவர பூச்சிக் கொல்லி மருந்துகள் வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு மானிய திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

**15—**

## விவசாயிகளுக்கு ஆலோசனை

**வினா எண் 16575—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கரும்புத் தோகையை ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றுவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரும்புத் தோகை மற்றும் ஆலை அழுக்கு கொண்டு ஊட்டமேற்றிய குப்பை எரு தயாரிக்க காய்ந்த கரும்புத் தோகையை 15 செ.மீ. உயரத்திற்கு சுமார் 7 மீட்டர் நீளம் மற்றும் 3 மீட்டர் அகலப் பாத்திகளாக பரப்ப வேண்டும். அதற்கு மேல் 5 செ.மீ. உயரத்திற்கு கரும்பு ஆலை அழுக்கினை பரப்பி மசூரி ராக் பாஸ்பேட், ஜிப்சம் மற்றும் யூரியா உரங்களை முறையே 2:2:1 என்ற விகிதாச்சாரத்தில் கலந்து. தோகை மற்றும் ஆலை அழுக்கு அடுக்கின்மீது 100 கிலோ தோகைக்கு, 5 கிலோ





உரக்கலவை என்ற விகிதத்தில் பரவலாகத் தூவிவிட வேண்டும். பின்னர் அடுக்கு முழுவதும் நன்கு நனையும் வண்ணம் தண்ணீர் தெளிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள இடுபொருட்கள், ஒவ்வொன்றையும் அதே அளவில் மற்றும் அதே முறையில் திரும்பவும் கொடுத்து, கடைசியாக அடுக்கின் மொத்த உயரம் 1.5 மீட்டர் அளவு வருமாறு செய்து தண்ணீர் தெளிப்பதற்குப் பதிலாக கிடைக்கும் இடங்களில் தொழு உரக்கரைசலை பயன்படுத்தலாம். பின்னர் அடுக்கு முழுவதையும் மண் மற்றும் ஆலை அழுக்கு முறையே 1:1 என்ற விகித அளவில் கலந்த கலவை கொண்டு 15 செ.மீ உயர அளவிற்கு மூடி விட வேண்டும். இவ்வடுக்கினை மூன்று மாதத்திற்கு மட்குவதற்காக அப்படியே விட்டுவிடவேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை அடுக்கு முழுவதும் நனையும் வண்ணம் நீர் தெளிக்க வேண்டும். மூன்று மாதமானதும் அடுக்கினைப் புரட்டி பின்னர் நன்கு கலந்து விட்டு ஒரு மாதத்திற்கு அப்படியே விட வேண்டும் நான்காவது மாத முடிவில் மறுபடியும் புரட்டிவிட்டு பின் கலந்து, 5-வது மாத முடிவு வரை 15 நாள் இடைவெளியில் தண்ணீர் தெளிக்க வேண்டும். இம்முறையில் தயாரிக்கப்படும் கரும்புத் தோகை கம்போஸ்டில் தழை மணி மற்றும் கால்சியம் சத்துக்களின் அளவு அதிகமாக இருப்பதோடு கரிமம் மற்றும் தழைச்சத்தின் விகிதாச்சாரம் கரும்புத் தோகையின் அளவைவிட 10 மடங்கு குறைவாக இருக்கும்.

இத்தொழில்நுட்பத்தினை வேளாண்ணைத் துறை விரிவாக்கப் பணியாளர்கள்மூலம் விவசாயப் பயிற்சி மற்றும் கருத்தரங்குகளில் விளக்கிக் கூறப்படுகிறது. மேலும் சில மாவட்டங்களில் செயல்முறை விளக்கப் பயிற்சியாகவும் செய்து காட்டப்படுகிறது.

**16—**

## குடியிருப்பு புதுப்பித்தல்

**வினா எண் 16901—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், அண்ணா பண்ணையிலுள்ள அரசுக் குடியிருப்பைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 பிப்ரவரி 8

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:—**

*விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், அண்ணா பண்ணையிலுள்ள அரசுக் குடியிருப்புகளும், குடியிருக்க முடியாத நிலையில் முற்றிலும் பழுதடைந்து சேதமடைந்து உள்ளதாலும், குடியிருப்புகளைச் சுற்றிலும் முட்புதர்கள் உள்ளதால், விஷ நச்சுக்கள் நடமாட்டம் உள்ளதாலும், குடியிருக்க முடியாத சூழல் உள்ளது. மேலும் மேற்கண்ட குடியிருப்புகள் யாவும் பழுதடைந்து பயன்படுத்த தகுதியற்றது என ஏற்கெனவே பொதுப் பணித் துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் அரசுப் பண்ணையில் உள்ள குடியிருப்புகள் எவற்றையும் புதுப்பிக்க இயலாது.*

**17—**

**விவசாயிகளை ஊக்குவித்தல்**

**வினா எண் 17206—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் தோட்டக்கலைப்பயிர்களை பயிர் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மானாமதுரை தொகுதியில் தோட்டக் கலைப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் நுண்ணீர் பாசனத் திட்டம் ஆகிய திட்டங்கள், மானியத்துடனும் விதைகள்/நடவுப்பொருட்கள்/இடுபொருட்கள் யாவும் மானிய விலையில் அளிக்கப்பட்டு வருகிறது.*



2013 பிப்ரவரி 8]

*(ஆ) நடப்பு நிதியாண்டில் மேற்குறிப்பிட்ட அனைத்துத் திட்டங்களும் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**18—**

**தானியங்கி வானிலை மையம்**

**வினா எண் 17320—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்மூலம் எஞ்சியுள்ள 88 வட்டாரங்களில் தானியங்கி வானிலை நிலையம் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் ஏற்கெனவே 224 வட்டாரங்களில் தானியங்கி வானிலை நிலையங்கள் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், நடப்பு 2012 ஆம் ஆண்டில் 161 வட்டாரங்களில் தானியங்கி வானிலை நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் எஞ்சியுள்ள 161 வட்டாரங்களில் தானியங்கி வானிலை நிலையம் அமைக்கும் பணி துவங்கப்படும்.*

**19—**

**கழிவுகளை மக்க வைத்தல்**

**வினா எண் 17322—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் கோகோ காய்ந்த இலை மற்றும் பழத்தோல் கழிவுகளை மட்க*

[2013 பிப்ரவரி 8

வைக்க ஆய்வு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோகோ கழிவுகளான காய்ந்த இலை மற்றும் பழத்தோல் கழிவுகளை மட்க வைக்கும் தொழில்நுட்பம் குறித்த ஆய்வு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

**20—**

## மஞ்சள் விதைக் கிழங்கு

**வினா எண் 17323—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் குறுகிய காலத்தில் மஞ்சள் விதைக் கிழங்கு உற்பத்தி பற்றிக்கண்டறிய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:—**

(அ) மற்றும் (ஆ) விரலி மஞ்சளில் ஒரு பரு உள்ள துண்டுகள் மூலம் குழித்தட்டுகளில் நிழற்கூடாரங்களில் விதைக் கிழங்கு உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் தற்பொழுது பவானிசாகரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி நிலையில் உள்ளது.



2013 பிப்ரவரி 8]

**21—**

## விவசாயிகளுக்குப் பயிற்சி

**வினா எண் 17325—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலுள்ள தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரிய பயிற்சி மையம்மூலம் கிராம விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின்மூலம் சேலத்தை மையமாகக் கொண்டு பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தில் ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு அறுவடை பின்செய்நேர்த்தி பயிற்சிகள் மற்றும் சந்தை அறிவுத்திறன் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சித் திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் நூறு விவசாயிகளுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

**22—**

## உழவர் சந்தை

**வினா எண் 17332—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய உழவர் சந்தைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் முதல் கட்டமாக 1999-2000 ஆம் ஆண்டில் காய்கறிகள் பழங்கள் முதலான வேளாண் விளைபொருட்கள், இடைத் தரகர்கள் குறுக்கீடின்றி உழவர்கள் நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்ய ஏதுவாக 100 உழவர் சந்தைகள் நிறுவ அறிவிக்கை வெளியிடப்பட்டு, 103 உழவர் சந்தைகள் நிறுவப்பட்டன. மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் 50 உழவர் சந்தைகள் நிறுவ அறிவிக்கை வெளியிடப்பட்டு, 51 உழவர் சந்தைகள் நிறுவப்பட்டன. மேலும், 2010-2011 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கூடுதலாக 25 உழவர் சந்தைகள் நிறுவப்பட்டு, ஆக மொத்தம் 179 உழவர் சந்தைகள் தமிழ்நாட்டில் தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன.*

*எனவே, தற்போது புதிதாக உழவர் சந்தைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**23—**

## தரம் பிரித்தல்

**வினா எண் 17349—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை அக்மார்க் முதன்மை ஆய்வகம் மற்றும் 30 ஆய்வகங்கள்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை இலட்சம் குவிண்டால் உணவுப் பண்டங்கள் தரம் பிரிக்கப்பட்டன?*

*(ஆ) இப்பணிக்காக இந்த ஆய்வகங்கள் பெறும் சேவைத் தொகை எவ்வளவு?*



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்கள் அக்மார்க் தரம் பிரிப்பின்கீழ் மத்திய தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்கள் மற்றும் மத்திய தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களுக்கு தரம் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டு மொத்தம் 16.20 இலட்சம் குவிண்டால் அக்மார்க் தரம் பிரிப்பில் உணவுப் பண்டங்கள் தரம் பிரிக்கப்பட்டன.*

*(ஆ) இப்பணிக்காக ரூ.46.07 இலட்சம் சேவைத் தொகையாக பெறப்பட்டுள்ளது.*

**24—**

## தக்காளி வணிக வளாகம்

**வினா எண் 17371—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் அமைக்கப்பட்டுள்ள தக்காளி வணிக வளாகத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் எவ்வளவு மதிப்புள்ள தக்காளி மதிப்பு கூட்டப்பட்டுள்ளது?*

*(ஆ) இதன்மூலம் பலன் அடைந்த சிறு, குறு விவசாயிகள் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினால் தக்காளிக்கென அமைக்கப்பட்டுள்ள குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் தரம் பிரிக்கப்பட்டு, மதிப்பு கூட்டி விற்பனை செய்யப்பட்ட தக்காளி 3,30,800 கிலோவாகும்.*

(ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினால் தக்காளிக்கென அமைக்கப்பட்டுள்ள குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகத்தினால் 2011-2012 ஆம் ஆண்டில் 1426 சிறு/குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**25—**

**வணிக வளாகம்**

**வினா எண் 17376—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வெங்காயம் மற்றும் இதர காய்கறிகளுக்கென சேமிப்பு வசதியுடன் கூடிய வணிக வளாகத்தை விவசாயிகளின் பயன்பாட்டிற்கு விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2010-2011-ன்கீழ் பெரம்பலூர் மாவட்டம், செட்டிகுளத்தில் வெங்காயம் மற்றும் காய்கறிகளுக்கென குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் ரூ.114.90 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அரசாணை (நிலை) எண் 20, வேளாண்மை (வே.உ1) துறை, நாள் 24-1-2011-ல் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

(ஆ) வணிக வளாகம் கட்டுமானப் பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிவடையும், இவ்வணிக வளாகம் கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகள் முற்றுப்பெற்றவுடன் விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.





**26—**

**பருத்தி விலை நிர்ணயம்**

**வினா எண் 17507—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்திக்கு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பருத்திக்கு மத்திய அரசு ஆண்டுதோறும், பருத்தியின் இழை நீளம் மற்றும் நூற்புத் தன்மையை கருத்தில் கொண்டு, குறைந்தபட்ச ஆதார விலையை (Minimum Support Price) நிர்ணயம் செய்கிறது. நடப்பு ஆண்டு (2012-2013) காரீப் பருவத்திற்கு இழை நீளம் 24.5-25.5 மி.மீ மற்றும் 4.3-5.1 நூற்பு தன்மை கொண்ட பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ.3,600 எனவும், 29.5-30.5 மி.மீ இழை நீளம், 3.5-4.3 நூற்பு தன்மை கொண்ட பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ.3,900 எனவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் நடப்பு 2012-2013 ஆம் ஆண்டு முதல் மத்திய பருத்திக் கழகம் மற்றும் NAFED மூலம் பருத்தி கொள்முதல் செய்யப்பட உள்ளது. உள்ளூர் சந்தைகளில் பருத்திக்கு குறைந்தபட்ச ஆதார விலைக்கு குறையாமல் விவசாயிகளுக்கு விலை கிடைப்பதால், அரசு கொள்முதல் விலை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**27—**

**தென்னங்கன்றுகள்**

**வினா எண் 21498—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 பிப்ரவரி 8

தஞ்சை மாவட்டம், வேப்பங்குளம் ஊராட்சியில் உள்ள மத்திய அரசின் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தென்னம்பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் முன்பதிவு செய்தவர்கள் விவரங்களை பொது மக்கள் பார்வைக்கு வைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், வேப்பங்குளம் ஊராட்சியில் இயங்கி வரும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, முன்பதிவு முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. விவசாயிகள் இவ்வலுவலகத்தை அணுகி முன்பதிவு செய்தவர்களின் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**28—**

## குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 21891—திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, சுத்தமல்லி-கல்லூர் பகுதிகளில் வாழைக்காய்களைப் பாதுகாக்க குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி தொகுதி, சுத்தமல்லி—கல்லூர் பகுதியில் வாழைக்காய்களைப் பாதுகாக்க குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைப் பயிர் சுமார் 8,000 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் சுத்தமல்லி—கல்லூர் பகுதியில் உள்ள மானூர் பாப்பக்குடி மற்றும் சேரன் மகாதேவி வட்டாரங்களில் உள்ள 49 கிராமங்களில் 1220 எக்டேர் பரப்பில் நேந்திரன், ரஸ்தாளி, ரொபஸ்டா போன்ற வகை வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியின் மொத்த வாழை உற்பத்தி 52,460 மெ.டன் ஆகும்.



2013 பிப்ரவரி 8]

இங்கு பயிரிடப்படும் வாழையில் சுமார் 70 விழுக்காடு வாழைத்தார்கள் கேரள மாநிலத்தில் உள்ள திருவனந்தபுரம் தினசரி சந்தைக்குச் செல்கிறது. ஏனைய வாழைத்தார்கள் காவல்கிணறு மற்றும் சிறுமளஞ்சி தினசரி சந்தைகள் மூலமாகவும், திருநெல்வேலி டவுன் நயினாக்குளம் காய்கனி சந்தை மூலமாகவும், தமிழ்நாட்டின் பிறபகுதிகளுக்குச் செல்கிறது. இம்மாவட்டத்தின் 70 விழுக்காடு உற்பத்தி பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் அனைத்துத் தார்களும் தற்போது உடனடியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உபரி ஏதுமில்லை.

**29—**

## பேருந்து பயண அட்டை

**வினா எண் 17775—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் படைவீரர்கள் மகளின் திருமணத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் நிதியுதவியும், முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுகளுக்குப் பேருந்து பயண அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போர் விதவையர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களின் மகளுக்கு திருமண நிதி உதவியாக ரூ.25,000/- தொகுப்பு நிதியிலிருந்தும், முன்னாள் படைவீரர்கள்/ முன்னாள் படைவீரர் விதவை மகளுக்கு திருமண நிதியுதவியாக ரூ.10,000/- தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்தும், மைய முப்படை வீரர் வாரியம், புது தில்லியிலிருந்து ரூ.16,000/- திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியுதவியினை ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கிட வழிவகை இல்லை.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுகளுக்கு பேருந்து பயண அட்டை வழங்குதல் குறித்து 8-8-2007 அன்று நடைபெற்ற தமிழ்நாடு முப்படை வீரர் வாரிய 65-வது கூட்ட நடவடிக்கை இனம் 9.8-ல் கோரியவாறு முன்னாள் படைவீரர் மூத்த குடிமக்களுக்கு பேருந்து பயணக் கட்டணச் சலுகை கோரி அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டதில், அரசு கடித எண். 21256/B.1/2007-1, போக்குவரத்து (B-1)த் துறை, நாள் 14-02-2008-ன் கீழ் இக்கருத்துரு ஏற்க இயலாது என்ற விவரம் பெறப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர்கள் மூத்த குடிமக்களுக்கு பேருந்து பயணக் கட்டணச் சலுகை அரசால் அனுமதிக்கப்படாத நிலையில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுகளுக்குப் பேருந்து பயண அட்டை வழங்கிட வழிவகை இல்லை.

**30—**

### கடன் உதவி

**வினா எண் 18320—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறையின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் வரும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஏற்கெனவே சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்கள் வழங்கி வருகின்றன.

2011-2012 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்க மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ரூ.500/- கோடி அளவிற்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், ரூ.482.70 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2012-2013 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்க ரூ.520/- கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 31-7-2012 வரை ரூ.140.94 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.





**31—**

### சாணமட்கு உரம்

**வினா எண் 7005—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் தொழிலாளர்களுக்கு கலப்பின மாடுகளை இலவசமாக வழங்கி, அவற்றின் சாண மட்கு உரத்தைப் பெற்று தேயிலை தோட்டத்திற்குப் பயன்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 'தொழிலாளர்களுக்கு பால் பண்ணைக்கு உரம்' என்ற நோக்கில் இதனைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் நிலங்கள் அனைத்தும் அரசு வனத் துறைக்குச் சொந்தமானதாலும், அவை வனப் பகுதிக்கு அருகில் உள்ளதாலும், மேய்ச்சல் நிலங்கள் (Grazing land) இல்லாததாலும், மற்றும் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் மாடுகளுக்கான கொட்டகைகள் அமைக்கப்பட்டால், அதன்மூலம் சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு நோய் பரவ வாய்ப்புள்ளது என்பதாலும் தொழிலாளர்கள் மாடுகள் வளர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் இக்கழகத்தில் இல்லை.

[2013 *பிப்ரவரி* 8

**32—**

**கூரைத் தகடுகள்**

**வினா எண் 10720—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகர், உடுமலை வனச் சரகத்திலுள்ள 12 மலைவாழ் குடியிருப்புகளுக்குப் புதிய கூரைத் தகடுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகர், உடுமலைப்பேட்டை மற்றும் அமராவதி வனச் சரகங்களில் 12 மலைவாழ் குடியிருப்புகள் உள்ளன. 12 மலைவாழ் குடியிருப்புகளிலும் மொத்தமாக 749 வீடுகள் உள்ளன. மேலும் ரூ.113.60 இலட்சம் செலவில் ஆனைமலை புலிகள் காப்பகம் திருப்பூர் கட்டுப்பாட்டில் வனப் பகுதியில் உள்ள குடியிருப்புகளைச் சீரமைக்க முதன்மை தலைமை வனப் பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பரிசீலனையில் உள்ளது. அத்துறையில் ஆணை வெளியிட்டபின், மேற்படி 12 மலைவாழ் குடியிருப்புகளுக்குப் புதிய கூரைத் தகடு அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.*

**33—**

**சிறப்பு தணிக்கையாளர் நியமனம்**

**வினா எண் 14436—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2013 *பிப்ரவரி* 8]

*கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் கழகம் லிமிடெட் நிறுவனத்தில் சரியான வரவு-செலவை அறிந்து கொள்வதற்குச் சிறப்பு தணிக்கையாளர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*அரசு ரப்பர் கழக வரவு-செலவுக் கணக்குகள் நிறுமச் சட்டம் 1956-ல் அறிவுறுத்தப்பட்டபடி பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி வரவு-செலவுக் கணக்குகளை உள்துறை தணிக்கையாளர் கொண்டு ஆய்வுகள் செய்யப்பட்டு அறிக்கைகள் பெறப்படுகின்றன. பின்னர் வரவு-செலவுக்கான ஆண்டுக் கணக்குகள்* (Annual Accounts) *நிறுமச் சட்டம் 1956-ன்படி அமைக்கப்பட்ட குழும உறுப்பினர்களைக்* (Board of Directors) *கொண்ட தணிக்கைக் குழுவால் ஆய்வு செய்யப்படுகின்றன. பின்னர் அக்கணக்குகள் குழுமக் கூட்டத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, இந்திய தணிக்கை துறைத் தலைவரால் பணியமர்த்தப்பட்ட சட்டபூர்வ தணிக்கையாளரான பட்டயக் கணக்கர்களால் தணிக்கை செய்யப்படுகின்றன. பின்னர் அவை இந்திய தணிக்கைத் துறை தலைவர் சார்பாக, மாநிலக் கணக்காயரால் தணிக்கை செய்யப்பட்டு அக்கணக்குகள்மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் குறிப்புகள் பெறப்படுகின்றன. இந்நிலையில் சிறப்புத் தணிக்கையாளர் நியமிக்க அவசியம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.*

**34—**

**காட்டுப் பன்றிகளின் தொல்லை**

**வினா எண் 17418—திரு. ஒ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவசாயப் பயிர்களை அழித்து தொல்லை கொடுக்கும் காட்டுப் பன்றியினத்தை வன விலங்கு பட்டியலில் இருந்து நீக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 பிப்ரவரி 8

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விளை நிலங்களில் காட்டுப் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதேபோல் விவசாயிகளிடமிருந்தும் எதிர்ப்பும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. எனவே காட்டுப் பன்றியின் தொல்லையைக் கட்டுப்படுத்தும் முகமாக, காட்டுப் பன்றியினத்தை வனவிலங்கு பட்டியலிலிருந்து நீக்குவது குறித்து பரிசீலிக்க ஒரு குழுவினை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

**35—**

## குரங்குத் தொல்லை

**வினா எண் 19132—திருமதி ர. சுபா:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், திட்டச்சேரி பகுதியில் குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி, தலைவாசல் ஊராட்சிக்குட்பட்ட திட்டச்சேரி கிராமப் பகுதியில் குரங்குகள் தொல்லை தொடர்பாக தம்மம்பட்டி வனச்சரக அலுவலர் அவர்களால், கள அலுவலர்களைக் கொண்டு கூண்டு வைத்து சுமார் 17 குரங்குகளைப் பிடித்து, தம்மம்பட்டி வனச்சரகத்திற்குட்பட்ட கெங்கவல்லி காப்புக்காட்டில் விடப்பட்டன. திட்டச்சேரி ஊராட்சியில் குரங்குகள் மீண்டும் தொல்லை தருவதாக மேற்கொண்டு புகார் மனு ஏதும் பெறப்படவில்லை. இது தொடர்பான புகார் மனுக்கள் வரப்பெற்றால் குரங்குகளை பிடித்து, காப்புக்காட்டின் உட்பகுதியில் விட அரசு நடவடிக்கை எடுக்கும்.*



2013 பிப்ரவரி 8]

**36—**

## விளைநில இழப்புகளைத் தடுத்தல்

**வினா எண் 21546—திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, கரியமங்கலம் கிராமத்திலுள்ள கரும்பு விளைநிலத்தை யானைகள் சேதப்படுத்துவதைத் தடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கரியமங்கலம் கிராமம், செங்கம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை தெற்கு வனக்கோட்டம், செங்கம் வனச் சரகத்திற்கு உட்பட்ட பகுதியாகும். செங்கம் சட்டமன்றத்திற்குட்பட்ட கரியமங்கலம் கிராமத்தில் யானைகள் கூட்டத்தால் பயிர்ச் சேதமோ, உயிர்ச் சேதமோ எதுவும் இல்லை.*

*யானைகள் செங்கம், பகுதிகளில் உலாவிய போது, வனத் துறை ஊழியர்கள் காவல் துறை மற்றும் வருவாய்த் துறை ஒத்துழைப்போடு பொது மக்களை உஷார்படுத்தி பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தனர். யானைகள் காட்டைவிட்டு வெளியில் வராமல் இருக்க காப்புக்காட்டின் எல்லைகளில் யானைத்தடுப்பு அகழிகள் ரூ.65.00 இலட்சம் செலவில் 26.00 கிலோ மீட்டருக்கு அமைக்கவும், மேலும் யானைகளுக்குப் போதுமான குடிநீர் ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு காப்புக்காட்டிற்குள் 2 நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ.4.00 இலட்சம் செலவில் அமைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, யானைக் கூட்டங்கள் காட்டைவிட்டு வெளியில் நடமாடுவதை முற்றிலும் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2013 பிப்ரவரி 8

**37—**

**நிர்வாக மேம்பாடு**

**வினா எண் 22651—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் கழகத்தின் நிர்வாகத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

அரசு ரப்பர் கழகத்தினை மேம்படுத்த அதன் உற்பத்தியினையும் உற்பத்தித் திறனையும் கூட்டுவதுதான் சிறந்த வழியாகும். அதற்கு உயர் ரக வீரிய ரப்பர் கன்றுகள் நடப்படவேண்டும். இதன்பொருட்டு கடந்த 2010-2011 மற்றும் 2011-2012-ம் வருடங்களில் 356.80 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இவற்றில் 2016-2017 ஆம் வருடத்தில் ரப்பர் பால் கிடைக்கத் துவங்கும். அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தவாறு 355 ஹெக்டேர் பரப்பளவில் உயர்தர வீரிய ரப்பர் கன்றுகள் மறு நடவு செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நடப்பட்ட எல்லா மரங்களும் உற்பத்தி துவங்கும்போது ரப்பர் உற்பத்தி பெருகி இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். அத்துடன் நிர்வாகமும் நல்ல முறையில் மேம்படுத்தப்படும்.

**38—**

**அடைப்புப் பலகை**

**வினா எண் 6923—திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஏரியிலிருந்து மாத்தாம் பள்ளம் வாய்க்காலில் ஷட்டர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 பிப்ரவரி 8]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஏரியிலிருந்து மாத்தாம்பள்ளம் வாய்க்கால் என்கிற செனப்பள்ளம் வாய்க்கால் பிரிந்து 62.40 ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் அளிக்கிறது. மேற்படி வாய்க்காலில் அடைப்புப் பலகை அமைக்கும் பணி 2012-2013 நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**39—**

**தூர் வாருதல்**

**வினா எண் 7633—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, சிறப்புப் பெருந்திட்டத்தில் வளவனாறு ஆற்றைத் தூர் வாரிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வளவனாறு மொத்த நீளம் கடைமடை நீர்ப் போக்கி வரை 19.00 கி.மீ. ஆகும். இதில் திருவாரூர் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் வளவனாறு வடிகால் வெள்ளத் தடுப்பு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், வளவனாறு கடைமடை நீர்ப்போக்கியிலிருந்து கடலில் கலக்கும் தூரம் 8 கி.மீ. ஆகும். இதனை வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு சேற்றைத் தூர்வாரும் பணிக்கென வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் இந்த வளவனாற்றிற்கு மதிப்பீடு தயாரிக்கும் நிலையில் பராமரிப்பு நிதியில் பணியின் அவசரம் மற்றும் தேவைக்கேற்ப மிக முக்கியமான பணிகள் திருவாரூர் வெண்ணாறு வடிநில கோட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2013 பிப்ரவரி 8

**40—**

**மராமத்துப் பணி**

**வினா எண் 8430—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மேலப்பசலை, கீழப்பசலை கண்மாயை மராமத்து செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மேலப்பசலை கண்மாயினை 3885 மீட்டருக்கு கரைகளைப் பலப்படுத்தவும், வரத்துக் கால்வாயினை 3815 மீட்டருக்கு தூர் வாரி சீரமைக்கவும், 3 மடைகள் மற்றும் 1 கழுங்கினை செப்பனிடவும் ரூ.48.15 இலட்சம் மதிப்பீட்டில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கீழப்பசலை கண்மாயினை மராமத்து செய்திட நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும்.

**41—**

**கால்வாய் சீரமைத்தல்**

**வினா எண் 8431—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கீழப்பசலை கண்மாய் வரத்துக் கால்வாயைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 பிப்ரவரி 8]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கீழப்பசலை கண்மாயின் வாயிலாக 301.09 ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இக்கீழப்பசலை கண்மாய் வரத்துக் கால்வாயினை நடப்பு நிதியாண்டில் (2012-2013) முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**42—**

**மேம்படுத்துதல்**

**வினா எண் 13978—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டம், அக்னியாறு, அம்புலியாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் பாசன மற்றும் வடிகால் வசதி அளிக்கும் அக்னியாறு மற்றும் அம்புலியாறு ஆகியவை வடிகால்களாகும். இவ்விரு உப வடிநிலங்களில் உள்ள ஏரிகள் மற்றும் நீர் ஆதார அமைப்பு கட்டுமானங்கள் புனரமைக்கும் பணிகள் தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் அக்னியாறு உப வடிநிலத்தில் ரூ.46.59 கோடி மதிப்பில் 190 ஏரிகள், 16 அணைக்கட்டுகள் மற்றும் அம்புலியாறு உப வடிநிலத்தில் ரூ. 23.47 கோடி மதிப்பில் 107 ஏரிகள் மற்றும் 17 அணைக்கட்டுகள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அக்னியாறு உப வடிநில பகுதியில் 95 சதவிகிதம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அக்னியாறு உப வடிநில பகுதியில் 95 சதவிகிதம் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய 5 சதவிகிதம் பணிகளும் 30-09-2012-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அம்புலியாறு உப வடிநில பகுதியில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன

[2013 பிப்ரவரி 8

**43—**

### மேம்படுத்துதல்

**வினா எண் 13995—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம், நாமக்கல் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் சூனைவாரி ஓடை / ஸ்வேதா நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள நிலவளத் திட்டம்* (IAMWARM) *2007 ஆம் ஆண்டிலிருந்து பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இதில் இரண்டாம் கட்டமாக* (Phase II) *தமிழகத்தில் உள்ள 16 துணை படுகைகளில் உள்ள நீர் ஆதார அமைப்புகளைக் புனரமைத்து மேம்படுத்த ரூ.185.88 கோடிகளுக்கான பணிகளுக்கு அரசாணை எண் 205, பொப(டபுள்யு.ஆர்1) துறை, நாள் 13-6-2008-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிகளில் (1) அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஆணைவாரி ஓடை துணை வடிநிலத்தில் உள்ள பணிகள் ரூ.2.29 கோடி செலவிலும் (2) ஸ்வேதா நதியில் உள்ள 4 சிப்பப் பணிகள் ரூ.8.87 கோடி செலவிலும் அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.*

**44—**

### கால்வாயை நீட்டித்தல்

**வினா எண் 14483—திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலவரப்பள்ளி அணையில் இடதுபுறக் கால்வாயை நந்திமங்கலத்திலிருந்து நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 பிப்ரவரி 8]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலவரப்பள்ளி அணையில் இடதுபுறக் கால்வாயை நந்திமங்கலத்திலிருந்து நீட்டிக்கும் திட்டம் வன நிலங்கள் வழியாகச் செல்வதால், இத்திட்டம் சாத்தியமில்லை.*

**45—**

### குளம் சீரமைப்பு

**வினா எண் 16224—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், தாயினிபட்டி இலுப்பகுளம் சீரமைப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், தாயினிப்பட்டி கிராமம் இலுப்பகுளத்தினைத் தூர்வாரி செப்பனிடும் பணிகள் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ்* (IAMWARM) *நடைபெற்று வருகின்றன.*

**46—**

### புதிய திட்டம்

**வினா எண் 20871—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, சித்தமல்லி அருகே பாமணி ஆற்றில் கண்ணன் ஆறு கலப்பதைத் தடுத்து நேரடியாக கடலில் கலக்கும் வகையில் புதிய திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருத்துறைப்பூண்டி தொகுதியில் சித்தமல்லி அருகே பாமணியாற்றில் கண்ணனாறு கலப்பதைத் தடுத்து நேரடியாக கடலில் கலக்கும் வகையில் புதிய திட்டத்தைச் செயல்படுத்த செயற்குறிப்பு எதும் இல்லை.*

**47—**

**புதிய வடிகால் திட்டம்**

**வினா எண் 20873—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாரூர் மாவட்டம், வெள்ளப் பாதிப்பைத் தடுத்திட பெண்ணாறு கடலிலே சென்று கலந்திடும் வகையில் புதிய வடிகால் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பைத் தடுத்திட பெண்ணாறு கடலிலே சென்று கலந்திடும் வகையில் புதிய வடிகால் திட்டம் தற்பொழுது ஏதும் இல்லை.*

**48—**

**புதிய வடிகால் ஆறுகள்**

**வினா எண் 20877—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டை ஒன்றியங்களை வெள்ளப் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க புதிய வடிகால் ஆறுகள் உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டை ஒன்றியங்களை வெள்ளப்பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க ஆசிய வங்கி வளர்ச்சி திட்டத்தின்கீழ் காவிரி மற்றும் வடிகால் ஆறுகளில் தூர் வாரி வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும்.*

**49—**

**கிளை மருந்தகம்**

**வினா எண் 587—திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தளி தொகுதி, நாட்ராம்பாளையம், உரிகம், உலிபண்டா, தொட்டமஞ்சி மற்றும் பெட்டமுகிலாளம் ஊராட்சி, கெத்தஅள்ளி ஆகிய மலைக் கிராமங்களில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, உரிகம் மற்றும் உலிபண்டா ஆகிய கிராமங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் குறைவாக உள்ளது. இக்கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் போதுமானதாகக் கருதப்படும். மேலும், நாட்ராம்பாளையம், தொட்டமஞ்சி மற்றும் கெத்தஅள்ளி கிராமங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 3000-க்கும் மேல் உள்ளதால் புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள்*

உள்ளது. புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் துவங்கும் திட்டத்தில் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து தேவையின் அடிப்படையில் துறையின்மூலம் பரிசீலிக்கப்படும்.

**50—**

### பணியமர்த்தல்

**வினா எண் 705—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டவும், மருத்துவர்கள் மற்றும் மருந்தாளர்களைப் பணியமர்த்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியத்தினைச் சார்ந்த கணபதிபாளையத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு மத்திய அரசு/மாநில அரசு நிதி உதவியுடன் கூடிய (ESVHD) திட்டத்தில் புதிய நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மருந்தகத்தில் 19-5-2011 முதல் கால்நடை உதவி மருத்துவர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். மேலும், பல்லடம் ஒன்றியத்தைச் சார்ந்த கணபதிபாளையம், கால்நடை மருந்தகத்திற்கு மருந்தாளர்கள் பதவி ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை. ஆனால் கால்நடை மருந்தகத்திற்கு மருந்தாளர்கள் பதவி ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை. கால்நடை ஆய்வாளர் நிலை-2 பதவி நடப்பு நிதியாண்டில் 350 கால்நடை ஆய்வாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட அரசிடம் அனுமதி வழங்கிட கோரப்பட்டுள்ளது. அரசின் அனுமதி பெறப்பட்டு, கால்நடை ஆய்வாளர் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் கால்நடை ஆய்வாளர் நிலை-2 ஆக பணி நியமனம் வழங்கப்படும் போது கணபதிபாளையம்,





கால்நடை மருந்தகத்தில் காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர் நிலை-1 பதவியில் பணி நியமனம் செய்யப்படும்.

(ஆ) புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**51—**

### தடுப்பூசி

**வினா எண் 10513—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அஸ்காட் திட்டத்தின்கீழ் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசி போடும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் தொண்டை அடைப்பான் நோய் கிளர்ச்சி ஏற்பட்ட காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, 2011-2012 ஆம் ஆண்டு அஸ்காட் திட்டத்தின்கீழ் 4,80,600 இலட்சம் டோஸ்கள் தொண்டை அடைப்பான் தடுப்பூசி மருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு 4,80,600 டோஸ்களும் கால்நடைகளுக்கு ஜனவரி 2012-க்குள் போடப்பட்டு, தொண்டை அடைப்பான் நோயிலிருந்து கால்நடைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

**52—**

### சப்பை நோய் தடுப்பூசி

**வினா எண் 10514—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அஸ்காட் திட்டத்தின்கீழ் 8 மாவட்டங்களில் கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் சப்பை நோய் கிளர்ச்சி அதிகளவில் ஏற்படும் என கண்டறியப்பட்ட 8 மாவட்டங்களுக்கு (கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர்) நடப்பாண்டில் மொத்தம் 2,84,000 இலட்சம் டோஸ்கள் சப்பை நோய் தடுப்பூசி மருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,80,250 டோஸ்களும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு, சப்பை நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன.*

**53—**

## ஆலையை இயக்குதல்

**வினா எண் 17401—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தலிலுள்ள அரசு சோமசுந்தரம் ஆலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தலிலுள்ள சோமசுந்தரம் ஆலையை மீண்டும் இயக்க அரசு அளவில் எவ்வித செயற்குறிப்பும் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**54—**

## தீண்டாமை ஒழிப்புச் சட்டம்

**வினா எண் 17398—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) ஆதி திராவிட மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்புச் சட்டம் மற்றும் வன்கொடுமைதடுப்புச் சட்டம் இரண்டையும் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 (தீண்டாமை ஒழிப்புச் சட்டம்) மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 ஆகிய இரு சட்டங்களும் அரசால் பலமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*(ஆ) குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1995 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 ஆகியவை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினால் செம்மையாகச் செயல்படுத்தப்படுகின்றன. சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவானது கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களின் தலைமையில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் சரகங்களில் துணைக் காவல் கண்காணிப்பாளர்களும், மாவட்டங்களில் காவல் ஆய்வாளர்களும், அவர்களுக்குத் துணையாக புள்ளியியல் ஆய்வாளர்களும் ஆக 30 மாவட்டங்களிலும் 6 காவல் ஆணையரகங்களிலும் இப்பிரிவு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.*

**சிறப்பு நீதிமன்றங்கள்**

*குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955-ன் பிரிவு 15-A(2) (iii)-ன் படியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989-ன் பிரிவு 14-ன்படியும் வன்கொடுமைத் தடுப்பு சட்ட வழக்குகளை விரைந்து நடத்திட நான்கு சிறப்பு நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இரண்டு சிறப்பு நீதிமன்றங்களை இந்த ஆண்டு உருவாக்க ஆணையிடப்பட்டு, நடவடிக்கை உள் துறை மூலமாக எடுக்கப்பட்டு வருகிறது.*

**வழக்குகள்**

தமிழக காவல் துறையால் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 100 வழக்குகள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்படும் வழக்குகள் தண்டனையில் முடிவதற்கு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு தலைமைச் செயலரிடமிருந்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினை முறையாக கூட்டி ஆய்வு நடத்த அறிவுரைகள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் தலைமைச் செயலர் அவர்களால், மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படும் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வுக் கூட்டங்களில், இதுகுறித்து ஆய்வு செய்து தகுந்த அறிவுரைகள் அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க ஏதுவாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைக் கடுமையான முறையில் அமல்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது குறித்ததான அறிவுரைகளைக் கூடுதல் காவல் துறை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு அவர்கள் சென்னை, விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி சரகங்களை ஆய்வு செய்து அந்தந்த மாநகர காவல் ஆணையர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கியுள்ளார்.

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணை நிலைகள், வன்கொடுமைச் சம்பவங்கள் நடவாமல் இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன குறித்து கூடுதல் காவல் துறை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு அவர்கள் மாதாந்திர குற்றாய்வுக் கூட்டத்தில் ஆய்வு செய்து வன்கொடுமை தடுப்புச் சட்டங்களைச் சிறப்பாக அமல்படுத்த தகுந்த அறிவுரைகள் வழங்கி வருகிறார்.

**தீருதவிகள்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள், 1995-ன் பிரிவு 12(4)-ன்படி வன்கொடுமைக்கு ஆளான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தீருதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.





கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட தீருதவித் தொகை விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | வருடம் | தீருதவி வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீருதவி பெற்றவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தீருதவி தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | 2010 | 761 | 1419 | 1.69 |
| 2. | 2011 | 770 | 1600 | 2.41 |
| 3. | 5/2012 | 243 | 456 | 0.59 |

மாநில அரசு ஒவ்வொரு வருடமும் ரூபாய். 2.25 கோடி தொகையினை தீருதவி வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வாறாக, ஆதி திராவிட மக்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்புச் சட்டம் மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இரண்டையும் மேம்படுத்த அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**55—**

**மிதிவண்டிகள்**

**வினா எண் 19077—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை மாணவர், மாணவியருக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

2011-2012 ஆம் நிதி ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 78,552 மாணவர்களுக்கும், 93,785 மாணவியர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**56—**

**முன்னோடி கிராம வளர்ச்சித் திட்டம்**

**வினா எண் 19100—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பாரதப் பிரதமர் முன்னோடி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டத்தில் எத்தனைக் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டன?*

*(ஆ) இங்கு என்னென்ன அடிப்படை வசதிகள் செய்யப்பட்டன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) பாரதப் பிரதமர் முன்னோடி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டத்தில் 68 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.*

*(ஆ) பாரதப் பிரதமர் முன்னோடி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 68 கிராமங்களில் 424 பணிகள் ரூ.13,41,35,000/- செலவினத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**57—**

**ஆட்சிமொழிப் பயிலரங்கங்கள்**

**வினா எண் 15959—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2011-12 ஆம் ஆண்டில் ஆட்சிமொழிப் பயிலரங்கங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பெற்றனவா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் ஆட்சிமொழிப் பயிலரங்கங்கள் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பெற்றன. டிசம்பர் 2011, ஜனவரி 2012, பிப்ரவரி 2012 மற்றும் மார்ச் 2012 ஆகிய திங்கள்களில் அனைத்து மாவட்டங்களிலும் வெவ்வேறு நாட்களில் ஆட்சிமொழிப் பயிலரங்கங்கள் நடைபெற்றன.*

**58—**

**சிற்றிதழ்களுக்கு பரிசுகள்**

**வினா எண் 15973—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2011-2012 ஆம் ஆண்டில் தமிழில் வெளிவரும் சிறந்த சிற்றிதழ்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டனவா?*

*(ஆ) ஆம் எனில், எந்தெந்த இதழ்களுக்கு வழங்கப்பட்டன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) தமிழில் வெளிவரும் சிறந்த சிற்றிதழ்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் ஏதும் தமிழ் வளர்ச்சித் துறையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**59—**

**நூலாசிரியர் நிதியுதவி**

**வினா எண் 15983—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2011-2012 ஆம் ஆண்டில் சிறந்த நூல்கள் வெளியிடும் நூலாசிரியர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் எத்தனை ஆசிரியர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது?*

*(ஆ) இந்த நிதி உதவியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) 2011-2012 ஆம் ஆண்டில் சிறந்த நூல்கள் வெளியிடும் நூலாசிரியர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 24 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) அரசாணை (நிலை) எண் 9, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 18-1-2012-ல் நூலாசிரியருக்குரிய நிதியுதவியை ரூ.25,000/-த்திலிருந்து ரூ.50,000/-ஆக அரசு உயர்த்தியுள்ளது.*

**60—**

**தையற்கூலி**

**வினா எண் 15342—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) அனைத்து அரசு அச்சகங்களில் பணிபுரியும் ஆண்களுக்கு வழங்கப்படும் தையற்கூலி 800 ரூபாயை 1000 ரூபாயாகவும், பெண்களுக்கு வழங்கப்படும் 120 ரூபாயை 200 ரூபாயாகவும் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2008 முதல் சீருடைக்கான தையற்கூலி, ஆண் பணியாளர்களுக்கு ஒரு ஜோடிக்கு ரூ.100/-லிருந்து ரூ.200/-ஆகவும் (200x4=800), பெண் பணியாளர்களுக்கு ஒரு ரவிக்கைக்கு ரூ.20/-லிருந்து ரூ.30/- ஆக உயர்த்தியும் வழங்கப்பட்டு வருகிறது.*

தற்போது பெண் தொழிலாளர்களுக்கு சீருடைக்குப் பதிலாக மேலங்கி (Overcoat) வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டு, அதற்கான தையற்கூலி ஓவர்கோட் ஒன்றுக்கு ரூ.175/- வீதம் இரண்டு ஓவர்கோட்டுக்கு ரூ.350/- (175x2=350) என வழங்க அரசாணை (நிலை) எண் 154, த.வ.அ.நி(ம) செ(எஅ2.1)த் துறை, நாள் 19-06-2012-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆண் தொழிலாளர்களுக்கு தையற்கூலியானது 2008 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருவதால், அரசு அச்சகங்களில் பணிபுரியும் ஆண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தையற்கூலி ரூ.800/-ஐ ரூ.1,000/-ஆக உயர்த்தி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**61—**

**மருத்துவர் நியமனம்**

**வினா எண் 8021—திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொள்ளாச்சி வட்டம், ஓடையகுளம் பேரூராட்சி, பெரியபோது கிராம துணை சுகாதார நிலையத்தைப் பராமரிக்கவும் மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் பெரியபோது முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்டு ஓடையக்குளம் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இத்துணை சுகாதார நிலையத்தில் பழுதடைந்துள்ள பகுதிகள் தேசிய ஊரக நலத் திட்டத்தின்மூலம் துணை சுகாதார நிலையத்திற்கு அளிக்கப்படும் நிதியிலிருந்து நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. இத்துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.*

**62—**

**கான்கிரீட் தளம்**

**வினா எண் 8331—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலத்தம்பாடி ஊராட்சி, பொன்னிரை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ஆலத்தம்பாடி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் பொன்னிரை என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் நிதியாண்டில் பழுதுபார்ப்பு பராமரிப்பு பணிகளுக்காக அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஆலத்தம்பாடி முதன்மை சுகாதார நிலையத்திற்கு சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டுள்ளது.*





**63—**

**கட்டட வசதி**

**வினா எண் 9886—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகக் கட்டடத்திற்கு ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

**64—**

**கட்டட வசதி**

**வினா எண் 10972—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி, சிவகாசி மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளிலுள்ள சுகாதாரப் பணிகள் இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணியின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*கிருஷ்ணகிரி, சிவகாசி மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளிலுள்ள சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்களுக்கு தலா ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து கட்டடப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.*

**65—**

**பணி நியமனம்**

**வினா எண் 10986—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை கிராமம், மாட்டையாம்பட்டி ஒன்றாவது வார்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை சீர் செய்து மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, மாட்டையாம்பட்டி ஒன்றாவது வார்டு துணை சுகாதார நிலையத்தை சீர் செய்ய நிதி ஒதுக்கீடு இல்லை. துணை சுகாதார நிலையத்தில் மருத்துவர் நியமிக்கப்படுவது இல்லை. ஒரு கிராம சுகாதார செவிலியர் மட்டும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.*

**66—**

**தரம் உயர்த்துதல்**

**வினா எண் 11200—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், எலைய முத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கவும் மற்றும் ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி, கூடுதல் மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எலையமுத்தூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. அதற்கு 9 கிலோ மீட்டர் தொலைவில், குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாட்டின் மக்கள் தொகைக்கேற்ப 1,614 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே எலையமுத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டும், மருத்துவர்கள் மறுசீரமைப்பின்படியும், மேற்படி மருத்துவமனைக்கு மருத்துவப் பணியிடங்கள் சீரமைக்கப்பட்டு, போதிய அளவு தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்களும் பணியில் உள்ளனர்.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**67—**

**கட்டட வசதி**

**வினா எண் 13689—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியத்தில் கணியூர், அரியநாச்சிபாளையம், மடத்துக்குளம், கிருஷ்ணாபுரம், சோழமாதேவி, குமரலிங்கம் மற்றும் குப்பம்பாளையம் துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், கணியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் அரியநாச்சிபாளையம் துணை*

சுகாதார நிலையமும், மடத்துக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கிருஷ்ணாபுரம், சோழமாதேவி ஆகிய துணை சுகாதார நிலையங்களும், குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் குமரலிங்கம் மற்றும் குப்பம்பாளையம் துணை சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. மேற்கூறிய துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. ஆதலால் மேற்கூறிய துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

**68—**

## கட்டட வசதி

**வினா எண் 13697—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், பெரிய வாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பாலப்பம்பட்டி மற்றும் சின்னவாளவாடி ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரியவாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பாலப்பம்பட்டி மற்றும் சின்னவாளவாடி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. சின்னவாளவாடி துணை சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்தில் இயங்குகிறது. பாலப்பம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே பெரியவாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் பாலப்பம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.



**69—**

## கட்டட வசதி

**வினா எண் 13699—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், எரிசினம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட கொடுங்கியம் மற்றும் கே. வல்லகொண்டாபுரம் ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் எரிசனாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கொடுங்கியம்—எரிசனம்பட்டி மற்றும் கே. வல்லகொண்டாபுரம் ஆகிய துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேற்கூறிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, மேற்கூறிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

**70—**

## கட்டட வசதி

**வினா எண் 13701—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 பிப்ரவரி 8

*(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட உருக்கம்பாளையம் மற்றும் ஆண்டியூர் துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் உருக்கம்பாளையம் மற்றும் ஆண்டியூர் துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன.*

*மேற்கூறிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, மேற்கூறிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.*

**71—**

**கட்டட வசதி**

**வினா எண் 13703—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட குப்பம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ்*



2013 பிப்ரவரி 8]

*குப்பம்பாளையம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

*குப்பம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, குப்பம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.*

**72—**

**அடிப்படை வசதி**

**வினா எண் 17202—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கொந்தகை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) சிவகங்கை சுகாதாரப் பகுதி மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கொந்தகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் புறநோயாளிகள் பிரிவு, தடுப்பூசி அறை, பிரசவ அறை, 2 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற அனைத்து வசதிகளுடனும், 2 மருத்துவர் மற்றும் செவிலியர்களுடனும், சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**73—**

**உணவு வசதி**

**வினா எண் 17547—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உணவு விடுதி நடத்த அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள அரசு அரசாணையின்படி புதியதாக உணவு விடுதி, தேநீர் கடை ஆகியவை அமைக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. ஏற்கெனவே உணவு விடுதி நடத்துபவர்கள் மட்டும் அனுமதியை புதுப்பித்துக் கொள்ளலாம் எனவும், புதியதாக உணவு விடுதி தொடங்க வேண்டுமெனில், உரிய கருத்துரு அரசளவில் பரிசீலிக்கப்பட்டு, அவசியமெனில் சிறப்பு நிகழ்வாகக் கருதி அனுமதி வழங்கலாம் எனவும் மேற்கண்ட ஆணையில் குறிப்பிட்டுள்ளது.*

**74—**

## காலிப் பணியிடங்கள்

**வினா எண் 18329—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை சுகாதாரப் பகுதியில் உள்ள புதுவயல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிப்பு*





*செய்யப்பட்டுள்ள மொத்த மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 5. அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு அனைவரும் பணிபுரிந்து வருகின்றனர். காலிப் பணியிடம் எதுவும் இல்லை.*

**75—**

## நவீன சமையலறைகள்

**வினா எண் 4240—திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் உள்ள விடுதிகளுக்கு நவீன சமையலறைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் 2007-2008 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு நவீனமுறையில் சமையலறைகளில் சமையல் எரிவாயு இணைப்புகளும், மின்சார புகைபோக்கி வசதிகளும் செய்து தரப்பட்டு வருகின்றன.*

**76—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 13688—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டம், துங்காவி கிராமம், க.ச.92/1B2 வசிக்கும் 10 பிற்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், துங்காவி கிராமம் ஆதி திராவிடர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கையகப்படுத்தப்பட்ட புல எண். 92/1பி2 நிலத்தில் 10 பிற்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

**77—**

### சிறுபாசன கடன் தொகை

**வினா எண் 17459—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறு, குறு விவசாயிகளுக்கான மானியத்துடன்கூடிய சிறுபாசனக் கடன் திட்டத்தின்மூலம் கடன் தொகை வரம்பினை உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு, குறு விவசாயிகளுக்கான கடன் திட்டத்தின்கீழ் பயனாளிகள் கடனை திரும்பச் செலுத்தும் திறன் அடிப்படையில், வங்கிகள் ரூ.1/- இலட்சத்திற்கு மேலும் கடன் தொகை வழங்கி வருகின்றன. இருப்பினும், தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி இத்தகைய நேர்வுகளில் 50 விழுக்காடு கடன்தொகை, அதிகபட்சமாக ரூ.50,000/- மட்டும் மானியமாக வழங்கப்படுகிறது. எனவே, கடன் தொகை வரம்பினை உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.*





**78—**

### கடன் தொகை

**வினா எண் 17466—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மகிளா சம்ரிதி யோஜனா திட்டத்தின்மூலம் கடன் தொகையின் குறைந்தபட்ச அளவாக ரூ.5,000/-மும், உச்ச வரம்பு ரூ.30,000/-மாகவும், வட்டி விகிதத்தை 2 சதவீதமாகவும், திருப்பிச் செலுத்தும் காலவரையறையை 2 முதல் 6 வருட காலமாகவும் நிர்ணயம் செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புது தில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முகவராகச் செயல்படுகிறது. எனவே, தேசிய நிறுவனம் வரையறுக்கும் நெறிமுறைகளைப் பின்பற்றியே கடன் உதவி வழங்கப்படுகிறது. தேசிய நிறுவனம் வகுத்துள்ள நெறிமுறையின்படி 'மகிளா சம்ரிதி யோஜனா' திட்டத்தின்மூலம் கடன்தொகை காலாண்டு தவணைகளில் 3 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். எனவே, இத்திட்டத்தின்கீழ் காலவரையை மாற்றி அமைப்பது தமிழக அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல. மேலும் தேசிய கழகத்தின் திருத்தியமைக்கப்பட்ட நிதி நடைமுறைகளின்படி இத்திட்டத்தின்கீழ் அதிகபட்ச கடன்தொகை ரூ.30,000/-ல் இருந்து ரூ.50,000/-மாக அரசாணை எண் 91, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 31-07-2012-ன்படி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.*

**79—**

**கடன் தொகை**

**வினா எண் 17467—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மகளிருக்கான புதிய பொற்காலத் திட்டத்தில் கடன் தொகையின் உச்சவரம்பை ரூபாய் ஒரு இலட்சமாகவும், வட்டி விகிதத்தை 2 விழுக்காடாகவும், ஆண்டு வருமான வரம்பினை கிராமப்புறத்திற்கு, ரூபாய் 1,00,000/-ஆகவும், நகரப் பகுதிக்கு ரூ.3,00,000/- ஆகவும் நிர்ணயம் செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புது தில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகவராகச் செயல்படுகிறது. மத்திய அரசு நிறுவனமான தேசியக் கழகம் இருமடங்கு வறுமைக் கோட்டிற்குள் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்கத்துடன் கடன் உதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வருமான வரம்பினை உயர்த்துவது மத்திய அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டதாகும், இருப்பினும் தேசிய கழகத்தின் திருத்தப்பட்ட நடைமுறைப்படி புதிய பொற்காலத் திட்டத்தின்கீழ் கடன் தொகையின் உச்சவரம்பு ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. வட்டி விகிதத்தைப் பொறுத்தவரை, இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 2 விழுக்காடு வட்டித் தொகையை தேசிய கழகத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. மீதம் 3 விழுக்காடு வட்டித் தொகை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு சேவைக் கட்டணமாக வழங்கப்படுகிறது. எனவே, வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு சாத்தியமில்லை. எனவே, கடன் தொகையின் உச்சவரம்பை ரூபாய் ஒரு இலட்சமாகவும், வட்டி விகிதத்தை 2 விழுக்காடாகவும், ஆண்டு வருமான வரம்பினை கிராமப்புறத்திற்கு ரூபாய் 1,00,000/- ஆகவும், நகரப் பகுதிக்கு ரூ.3,00,000/-ஆகவும் நிர்ணயம் செய்வது குறித்தும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*



**80—**

**கடனுதவி**

**வினா எண் 17468—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் பயிற்சி பெற்ற பெண்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தில் குறைந்தபட்சம் ரூ.1,00,000/- கடனுதவி அளித்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தொழில் முனைவோருக்கான பயிற்சி பெற்ற மகளிருக்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் பொதுக் கடன் திட்டத்தின் விதிமுறைப்படி கடன் வழங்கி வந்தது. தற்போது சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ள மகளிருக்கு அதிகபட்சமாக ரூ.50,000/-வரை 4 விழுக்காடு வட்டி விகிதத்திலும் புதிய பொற்கால திட்டத்தின்கீழ் மகளிருக்கு மட்டும் அதிகபட்சமாக ரூ.1,00,000/- வரை 5 விழுக்காடு வட்டி விகிதத்திலும் கழகம் கடனுதவி வழங்கி வருவதால் தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்கான கடனுதவி கோரி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் விண்ணப்பம் ஏதும் பெறப்படுவதில்லை.*

*எனவே, தொழில் முனைவோருக்கான பயிற்சி பெற்ற மகளிர் மேற்குறிப்பிட்ட புதிய பொற்காலத் திட்டத்தின்கீழ் கடன் தொகையாக ரூ.1,00,000/- வரை 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் பெற்று பயனடையலாம். இதனால் தொழில் முனைவோருக்கான பயிற்சி பெற்ற மகளிருக்கு கடன் தொகையை உயர்த்தும் அவசியம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**81—**

## சிறுகடன்

**வினா எண் 21000—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் வடக்கு தொகுதியில் சிறு நடைபாதைக் கடை நடத்தும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு சிறுகடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) (1) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களில் பொது காலக் கடன் திட்டங்களின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளின்மூலம் பயனாளி ஒருவருக்கு ரூ.1 இலட்சம் வரை 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடன் உதவி வழங்கப்படுகிறது.*

*(2) புது டெல்லி தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று மேற்படி கழகத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினர் இனத்தவர்களுக்கு (அதாவது குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் ரூ.40,000/-க்கு மிகாமலும், நகரப்புறமாயின் ரூ.55,000/-க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு கடன் அளிக்கப்பட்டு வருகிறது.*





***(3) தனிநபர் கடன்***

*வியாபாரம்/தொழில் செய்திட கூட்டுறவு வங்கிகள்மூலம் தனி நபர் பயனாளிகளுக்கு திட்டத்திற்கு ஏற்படும் அதிகபட்ச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு 95 விழுக்காடு வரை கடனாக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படுகிறது. ரூ.1.00 இலட்சத்திற்குமேல் ரூ.5.00 இலட்சம் வரை தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் ஒப்புதல் பெற்று கடன் அளிக்கும். இக்கடன் 6 விழுக்காடு சலுகை வட்டியில் வழங்கப்படுகிறது. இக்கடன் 36 முதல் 60 மாத தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இக்கடன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் அளிக்கப்படுகின்றது.*

***(4) சிறுபான்மை சுய உதவிக் குழுக்கள்மூலம் சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டம்***

*இத்திட்டத்தின்கீழ் சிறுபான்மையின மக்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்து, தனியாகவோ அல்லது சேர்ந்து சிறு வியாபாரம் செய்து தங்களது வருமானத்தைப் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திக் கொள்ளும் வண்ணம் ரூ.25,000/— வரை, 4% குறைந்த வட்டியில் சிறு கடன் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தகுதியுடைய சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் இவ்விண்ணப்பங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அல்லது கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்று முழுமையாகப் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தால் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடன் வழங்கும்.*

**82—**

## பல்நோக்கு அங்காடிகள்

**வினா எண் 9129—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 பிப்ரவரி 8

*(அ) திருக்கோயில்களுக்கு சொந்தமான காலி இடங்களில் கூட்டு முயற்சியில்* (Joint Venture) *பலநோக்கு அங்காடிகள் கட்டப்பட உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எத்தனைத் திருக்கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருக்கோயில் நிதிநிலை, சந்தைத் தேவை மற்றும் இதர காரணிகளைப் பரிசீலித்து திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களில் பல்நோக்கு அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும், பலநோக்கு அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களில் உள்ள கடைகள்/ தளங்களுக்கான வாடகை உரிமையினை "நன்கொடை பொது ஏலத்தின்" மூலம் உயர்ந்த நன்கொடையினை வழங்கும் நபரை நிர்ணயம் செய்து அன்னாருக்கே வழங்கும் வகையில் 'திருக்கோயில்கள் காலிமனை மேம்பாட்டுத் திட்டம்' என்ற திட்டத்தினை செயலாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதியில் பதினான்கு திருக்கோயில்கள் பரிசீலனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் நிதிநிலை, சந்தைத் தேவை வியாபாரச்சூழல் போன்ற பல்வேறு காரணிகளை பரிசீலித்து பலநோக்கு அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, இதற்கான தகுதி வாய்ந்த திருக்கோயில்களை அரசின் இசைவுடன் இறுதியாக தேர்வு செய்து, விரைவில் இத்திட்டத்தினை நிறைவேற்றிட பரிசீலிக்கப்பட்டு வருகிறது.*

**83—**

## ஒதுக்கீடு

**வினா எண் 9135—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 பிப்ரவரி 8]

*(அ) இந்து சமய அறநிலையங்கள் துறையின்கீழுள்ள திருக்கோயில்களில் செயல்படும் கருணை இல்ல மாணவர்கள் 2010-2011 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு கலை, அறிவியல், தொழில்சார் பட்டப்படிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?*

*(ஆ) பிற கல்வி நிறுவனங்களில் எத்தனை மாணவர்களுக்கு 50 சதவீத கல்விக் கட்டணம் வழங்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வரும் 33 கருணை இல்லங்களில் உள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி பயிலச் சலுகை வழங்கி வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 275, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (அநி4.2) துறை, நாள் 28-10-2011 அனைத்து கருணை இல்ல நிருவாகிகளுக்கும் அனுப்பப்பட்டு, திருக்கோயிலின் கல்விக் கட்டணத்தில் 50 விழுக்காடு படிப்பு காலம் முடியும் வரை வழங்கிட ஏதுவாக மேற்படி திருக்கோயில்களின் அறங்காவலர் குழு/தக்கார் தீர்மானம் நிறைவேற்றி அறிக்கை அனுப்ப அனைத்து கருணை இல்ல நிர்வாகிகளையும் கேட்கப்பட்டுள்ளது.*

*அரசாணை (நிலை) எண் 275, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (அநி4.2) துறை, நாள் 28-10-2011, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. இந்து சமய அறநிலையங்கள் துறையில் செயல்படும் கருணை இல்ல மாணவர்கள் 2010-2011 ஆம் ஆண்டில் கலை, அறிவியல், தொழில்சார் பட்டப் படிப்பில் சேர கல்விக் கட்டண சலுகை வழங்க அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. 2011-2012 ஆம் ஆண்டில் இச்சலுகைக்கான தகுதியான மாணவர்கள் இல்லை.*

*இந்து சமய அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கருணை இல்ல மாணவர்களுக்கு இத்துறையால் நடத்தப்படும் கல்லூரிகளில் உயர்கல்வி பயில்வதற்கு ஆண்டுதோறும் நிர்வாக ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கவும், முழு கட்டண விலக்கு அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2013 பிப்ரவரி 8

**84—**

## மேம்பாட்டுப் பணிகள்

**வினா எண் 9143—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசு முன் வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் கீழ்க்கண்ட மேம்பாட்டுப் பணிகள் பக்தர்கள் நலன் கருதி செய்யப்படவுள்ளன:—

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகள் பயன்பெறும் வகையில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி திருக்கோயிலின் மேற்கில் அமைக்கும் பணி | ரூ.5.00 இலட்சம் |
| 2. | திருக்கோயில் அன்னதான கூடத்தினை ஆர்.சி.சி. மண்டபமாக மாற்றி நவீன வசதிகளுடன் சீரமைத்தல் பணி | ரூ.80.00 இலட்சம் |
| 3. | திருக்கோயில் உட்பிரகாரங்களில் (2 மற்றும் 3ஆம் பிரகாரம்) பக்தர்கள் வசதிக்காக எஸ்.எஸ். பைப்பிலான கியூ லைன்கள் புதுப்பித்தல் பணி | ரூ.50.00 இலட்சம் |



2013 பிப்ரவரி 8]

மேலும் தேவையான மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**85—**

## முறைப்படுத்துதல்

**வினா எண் 9144—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பௌர்ணமி அன்று திருவண்ணாமலை கிரி வலப் பாதையில் உள்ள அதிகப்படியான கடைகளை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பிரதி மாதமும் பௌர்ணமி நாட்களில் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள கடைகள் யாவும் திருவண்ணாமலை, அத்தியந்தல், அய்யம்பாளையம், அடிஅண்ணாமலை, ஆடையூர் மற்றும் வேங்கிக்கால் ஆகிய ஊராட்சிக்குட்பட்ட இடங்களில் தற்காலிகமாக கடைகள் போடப்படும். இக்கடைகளுக்கான வாடகை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின்மூலம் வசூலிக்கப்படுகிறது. பிரதி மாதமும் பௌர்ணமி தினத்தன்று அமைக்கப்படும் அதிகப்படியான கடைகளை முறைப்படுத்துவது குறித்து 2-2-2012 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட மாதாந்திர பௌர்ணமி கலந்தாய்வு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இனிவரும் பௌர்ணமி தினங்களில், கிரிவலப் பாதையில் போடப்படும் கடைகளின் எண்ணிக்கையினைக் கணக்கிட்டு, அதிகப்படியானக் கடைகளை கண்டறிந்து மாவட்ட நிர்வாகத்தின்மூலம் முறைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**86—**

**குடியிருப்புகள்**

**வினா எண் 9146—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ.5.62 கோடி ஆகும். இத்திருக்கோயிலின் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்ட ரூ.99 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் 22-12-2011-ல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் நடைபெறவுள்ளன.*

**87—**

**ஓய்வூதியம்**

**வினா எண் 14426—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிராமக்கோயில் முதிய பூசாரிகளுக்கு ஓய்வூதியம் தொடர்ந்து மாதம் தவறாமல் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிரம்பிய பூசாரிகளுக்கு கிராமக் கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தகுதிவாய்ந்தவர்களுக்கு அரசாணை (நிலை) எண் 63, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் (அநி 4.2) துறை, நாள் 17-2-2006-ன்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 750/-தொடர்ந்து மாதம் தவறாமல் வழங்கப்பட்டு வருகிறது.*

**88—**

**உதவித் தொகை**

**வினா எண் 15326—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை 1 இலட்சம் ரூபாயை 1.50 இலட்சமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையில் பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு 20-10-2008 முதல் குடும்ப நல நிதியுதவித் தொகை ரூ.1 இலட்சம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடும்ப நல நிதியுதவித் தொகையை ரூ.1.50 இலட்சமாக உயர்த்தும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**89—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 15987—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1955 ஆம் ஆண்டு வேளாண் குத்தகை பாதுகாப்புச் சட்டத்தின்படி விசாரித்து முடிவு செய்யும் மன்னார்குடி வருவாய் நீதிமன்றத்தை நீதிமன்றமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): 1955 ஆம் ஆண்டு வேளாண் குத்தகை பாதுகாப்புச் சட்டத்தின்படி விசாரித்து முடிவு செய்யும் மன்னார்குடி நீதிமன்றத்தை, புதியதாக உருவாக்கப்பட்ட நான்கு கூடுதல் வருவாய் நீதிமன்றங்களில் ஒன்றாக உருவாக்கி வருவாய்த் துறை அரசாணை (நிலை) எண் 258, வருவாய் [நி.சீ.1(1] துறை, நாள் 11-7-2012-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.*

*புதியதாக கூடுதல் நீதிமன்றமாக உருவாக்க உத்தரவிடப்பட்ட மன்னார்குடி வருவாய் நீதிமன்றம் மேற்கண்ட ஆணையின்மூலம் தரம் உயர்த்தப்பட்டது.*

**90—**

## பொது மண்டபம்

**வினா எண் 19928—திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலுக்கு சொந்தமான யானை மகாலை பொது மண்டபமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சட்டப் பிரிவு 46(iii)-ன் கீழ் உள்ள, பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான யானை மகால் மண்டபத்தில் தற்போது யானை நிறுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதால், திருக்கோயிலுக்கு மேற்படி மண்டபம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, மேற்படி மண்டபத்தை பொது மண்டபமாக மாற்றுவதற்கு இயலாது.*

**91—**

## அடிப்படை வசதி

**வினா எண் 19948—திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெறும் திருமண விழாவிற்கு உணவு பரிமாற இடவசதி செய்யவும், பக்தர்களுக்காக கழிப்பிட வசதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் நடைபெறும் திருமண விழாவில் உணவு பரிமாறக்கூடிய செயல் திருக்கோயிலில் நடைமுறையில் உள்ள பழக்க, வழக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்பதாலும், திருக்கோயிலின் தூய்மை கருதியும் திருமண விழாவில் உணவு பரிமாற அனுமதி வழங்கப்படுவதில்லை. மேலும், பக்தர்களின் வசதிக்காக கழிவறைகள் திருக்கோயில் வெளிப் பிரகாரத்தில் கட்டப்பட்டுள்ளது.*

**92—**

**அடிப்படை வசதி**

**வினா எண் 21296—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேரூராட்சி, ஸ்ரீபேட்ராயசுவாமி திருக்கோயிலுக்கு அடிப்படை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பேட்ராயசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப் பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை-3 செயல் அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர், குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டு அதன்மூலம் வழங்கப்படுகிறது. பக்தர்கள் இளைப்பாற முன்மண்டபங்கள் உபயதாரர்கள்மூலம் கட்டப்பட்டுள்ளதுடன், நவீன கழிப்பிட வசதி செய்திட திருக்கோயில்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விரைவில் நவீன கழிப்பிடம் அமைக்கப்பட உள்ளது.*

**93—**

**கோயில் நிதி**

**வினா எண் 22213—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காரைக்குடி தொகுதியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு புதிய கோயில்கள் கட்டுவதற்கு ரூ. 50,000 வழங்குவதை போல, பிற சமுதாய மக்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் ஏற்கெனவே உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்வதற்கு மட்டும் ரூ.50,000/- தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பிற சமுதாய மக்கள் வசிக்கும் பகுதியில் புதிய திருக்கோயில்கள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கப்படுவதில்லை. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள கிராமப்புற திருக்கோயில்களின் புராதனத் தன்மைக்கேற்ப திருக்கோயில்கள் திருப்பணிக்கு நிதி வழங்கப்பட்டு வருகிறது.*

**94—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 22215—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*காரைக்குடி தொகுதி, காரைக்குடி, தேவகோட்டை பகுதியிலுள்ள கிராமக் கோயில் பூசாரிகளை நிரந்தரமாக்கவும் மற்றும் கோயில் ஒரு கால பூஜைக்கு கொடுக்கப்படும் போக்குவரத்து கழக வைப்பீட்டின் வட்டியை நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் மாற்றவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(i) *கிராமக் கோயில் பூசாரிகள் பணியாற்றும் கிராமக் கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் வராத திருக்கோயில்கள் ஆகும். மேற்படி கிராமக் கோயில் பூசாரிகளை நிரந்தரமாக்குவது தொடர்பாக இத்துறையின்மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது.*

(ii) ஒரு கால பூசை நிதியுதவி திட்டத்தின்கீழ் தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவனத்தில் 1,023 திருக்கோயில்களுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசை செய்வதற்கு காலாண்டு வட்டி மேற்படி நிறுவனத்திலிருந்து வட்டி வாரண்டுகளாக வரப்பெறுகிறது. மேற்படி வட்டியை அந்தந்த திருக்கோயில்களின் பெயரில் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**95—**

**மேல் நடவடிக்கை**

**வினா எண் 2775—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதி, சிவகங்கை வட்டம், வேம்பங்குடி, எட்டணம் கிராமங்களில் உள்ள சொத்துக்கள் எந்தவித ஆவணமும் இன்றி நில மோசடி கும்பல்கள் 2006-2011 ஆண்டுகளில் போலியாக பட்டா மாறுதல் செய்த மோசடி நபர்கள்மீது நடவடிக்கை எடுத்து எப்பொழுது நிலம் மீட்டுக் கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

இப்பொருள் தொடர்பான வழக்கு சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, இவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரே இதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**96—**

**ஆக்கிரமிப்பு அகற்றல்**

**வினா எண் 8383—திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பெரியகுளம் தொகுதியில் வடுகபட்டி, ஜெயமங்கலம் பகுதியில் பொட்டல்குளம், கல்குளம், ரெங்கன்குளம், நஞ்சாவரம் கண்மாய்களில் ஆக்கிரமிப்பை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் வட்டம், ஜெயமங்கலம் பகுதியில் மேல்மங்கலம் கிராமம், பொட்ட வண்ணான்குளம் மற்றும் லக்கியம்பட்டி(கல்குளம்) நந்தியாபுரம் (நஞ்சாபுரம்) ஆகிய கண்மாய்களில் நில அளவையாளர்கள்மூலம் நில அளவைப் பணிகள் நடைபெற்று கற்கள் ஊன்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எல்லைகளை வரையறை செய்த பின்பு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

**97—**

**நிலவரி வசூல்**

**வினா எண் 12256—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நிலுவையாக உள்ள நில வரியை வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:—**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், நீலகிரி, திருப்பூர், திருவாரூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் நில வரி வசூல் நிலுவையில் உள்ளது. மேலும், நில வரி நிலுவையினைக் குறைக்க தனிக் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை

மேற்கொள்ளுமாறு மேற்கண்ட மாவட்ட ஆட்சியர்களிடம் கோரப்பட்டுள்ளது. தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் தங்களது சார்நிலை அலுவலர்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தி நிலவரி நிலுவையினை விரைந்து வசூல் செய்திட தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு நிலவரி நிலுவையினைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**98—**

## ஆக்கிரமிப்பு அகற்றல்

**வினா எண் 12393—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி கட்டுப்பாட்டில் உள்ள புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண். 105, வருவாய்த் துறை நாள் 7-3-2001 இல் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் காவல், ஊராட்சி, நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறை அலுவலர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவினை அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட குழு மாதந்தோறும் கூடி அரசு நிலங்களிலுள்ள ஆக்கிரமணங்களை அகற்ற திட்டங்கள் வகுத்து ஆக்கிரமணத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் உச்சநீதிமன்ற ஆணை 1132/2011 நாள் 28-1-2011 அன்றைய தீர்ப்பாணையில் மிகவும் ஆட்சேபனையுள்ள அரசு புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், உச்சநீதிமன்ற ஆணையினைத் தவறாமல் கடைப்பிடித்து கிராம பஞ்சாயத்து மற்றும் அனைத்து அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து மாவட்டங்களிலும் ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அவற்றினை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1-4-2011 முதல் இதுவரை 77,734 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.





**99—**

## ஆக்கிரமிப்பு அகற்றல்

**வினா எண் 12402—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நகர்புற நில ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905-ன்படி ஆட்சேபணையுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்ற துறை வாரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**100—**

## வருவாய் கிராமங்கள் சீரமைப்பு

**வினா எண் 15761—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிருவாக வசதிக்காக கன்னியாகுமரி மாவட்ட வருவாய் கிராமங்களைப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?